வாரப் பதிப்பு விலை சதம் 15

# சுதந்திரன்
SUTANTIRAN

194A, SILVERSMITH STREET, COLOMBO-12

தாமரைப்பூ மார்க்
சந்தனத் தைலம்
கண்களுக்கு பிரகாசமும் மூளைக்குக் குளிர்ச்சியையும் தருவது நறுமணமுடையது எங்கும் கிடைக்கும்.
முழு இலங்கைக்கும் சோல் ஏஜண்ட்ஸ்:
M. ஹைதரலி & பிரதர்ஸ்.
22. 2/7 ஆதமலி பில்டிங், கொழும்பு 11

புத்தகம் 6 நந்தன ஞூ ஆடிமீ 19உ [3-8-52] ஞாயிற்றுக்கிழமை ஜுல்காயிதாபிறை 11 இதழ் 10

# ★ போலீஸ் படையினரை வடிகட்ட நடவடிக்கை

## இடது சாரி அனுதாபிகள் இடம்பெற்று விட்டனராம்

### தேர்தல் மனு நிதிகளுக்கு போலீஸ்காரர் உதவி?

(நமது நிருபர்)

இலங்கைப் போலீஸ் படையுள் மிகப் பெரும் அளவில் இடது சாரிகளின் அனுதாபிகள் இடம் பெற்றிருப்பதால் அப் படையினரை வடிகட்டிச் சுத்தி செய்யும் வேலை சமீபத்தில் ஆரம்பமாகக் கூடும்.

போலீஸ் படையிலுள்ள ஒவ்வொரு போலீஸ்காரரினதும் அதிகாரியினதும் நன்னடத்தைப் பதிவுகளைத் தனித் தனியாகப் பரிசிலனை செய்வதற்காக ஒரு இலாகா கமிட்டியொன்று நிறுவப்படவேண்டுமென்று கடந்த சில வாரங்களாக ஆலோசிக்கப்படுகிறது. இவ்வாரம் நடைபெற்ற போலீஸ் இலாகா அதிகாரிகளின் மகாநாட்டில் போலீஸ் தலைவர் சேர் ரிச்சர்ட் அலுவிஹாரே இது விஷயமாக விவாதித்தாரென்று கூறப்படுகிறது.


கடந்த பொதுத் தேர்தலில் போலீஸ்காரர்களின் நடவடிக்கைகள் சம்பந்தமாக ஏற்பட்ட அஞ்சத்தக்க நிலைமைதான் இதற்குக் காரணம். போலீஸ் படையில் ஒரு சக்திவாய்ந்த பகுதியினர் எதிர்க் கட்சி அபேட்சகர்களுக்காக வேலை செய்தார்களென்று கூறப்படுகிறது.

இடதுசாரி கோஷ்டிகளுக்கு தேர்தல் மனு உதவி நிதி திரட்டுவதில் போலீஸ் அதிகாரிகளும் உதவி அளித்திருக்கிறார்களென்று கொழும்புக்கு கிடைக்கும் தகவல்கள் இந்த நிலைமையைக் கடுமையாக்கிவிட்டன.

யு. என். பி. கண்டிப் பிரதிநிதிக்கெதிராகத் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் தேர்தல் மனுவுக்கு நிதி திரட்டும் நிதி ஜாபிதாவில் கண்டி போலீஸ்காரர்களின் பெயர்களும் காணப்படுகிறதென்று சேர் ரிச்சர்ட்டுக்கு கண்டியிலிருந்து கிடைத்த ஒரு ஸி. ஐ. டி. தகவல் கூறுகிறது.

பிரஸ்தாப நிதிக்கு பணம் உதவியளித்த போலீஸ்காரர்களின் பெயர்களை உடனே தெரிவிக்குமாறு சேர் ரிச்சர்ட் உத்தரவு அனுப்பியிருக்கிறார் என்றும் தெரிகிறது.

அதிகாரிகள் மத்தியில் இந்த நிலைமை அஞ்சத்தக்க முறையில் வளர்கிற சமயத்தில், இந்த விஷயமாக அரசாங்கம் என்ன செய்யப்போகிறதென்று அறிய முழு போலீஸ் படையும் ஆவல்கொண்டிருக்கிறது.



நியூயோர்க் நகரத்தின் மத்தியில் "ரொக்பெலர்ஸெண்டர்" என்ற பெயருடன் 12 ஏகராவிஸ்தீரணமுள்ள 15 கட்டடங்கள் கம்பீரமாக நிற்கின்றன. ஆகாயத்திலிருந்து எடுக்கப்பட்ட இப்படத்தில் மிகவும் உயரமானது 70 மாடிகளுள்ள அமெரிக்க ரேடியோ கோபரேஷன் பவனம்தான்.

## அறப்போர் வீரர்களை அலட்சியம் செய்த தமிழ் மந்திரி

### இதுவரை 3750 பேர் சத்தியாக்கிரகம் செய்துவிட்டனர்

பிரதம மந்திரியின் காரியாலயத்தின் முன்னால் சத்தியாக்கிரகம் ஆரம்பமாகி 96 தினங்களாகிவிட்டன. ஆரம்ப தினத்தில் காணப்பட்ட அதே உணர்ச்சியுடன் சத்தியாக்கிரகம் இன்னும் தொடர்ந்து நடைபெறுகிறது.

இதுவரை சுமார் 3750 பேர் சத்தியாக்கிரகம் செய்துவிட்டனர். சில வசதிக் குறைவின் காரணமாக பெண்கள் சத்தியாக்கிரகத்தில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படவில்லை. ஆகவே சத்தியாக்கிரகம் செய்வதற்காக பொல்காவெலயிலிருந்து வந்த திருமதி பொடிநோனா ஏமாற்றத்துடன் திரும்ப வேண்டியதாயிற்று.

இவ்வாரம் பதுளைக் காங்கிரஸ் பொதுக் காரியதரிசி திரு ஏ. கே. கந்தசாமி இரண்டாவது முறையாக 6 நாள் உபவாசமிருந்து சத்தியாக்கிரகம் செய்தார். தினசரி 25க்குக் குறையாத தொண்டர்கள் சத்தியாக்கிரகம் செய்கின்றனர். சில நாட்களில் இந்த எண்ணிக்கை 100வரை உயர்ந்துவிடுகிறது.

29-7-52 காலை 11-45க்கு பிரதம மந்திரியும் தபால், தகவல் மந்திரி திரு எஸ். நடேசனும் பிரதமரின் காரியாலயத்திற்கு வந்தார்கள்.

அப்பொழுது சத்தியாக்கிரகிகள் அவ்விருவருக்கும் கைகூப்பி வணக்கம் செலுத்தினார்கள். பிரதம மந்திரியும் பதிலுக்கு கைகூப்பி வணக்கம் செய்தார். ஆனால் மந்திரி நடேசனோ மரியாதைக்காவது வணக்கம் செலுத்தாமல், கீழே குனிந்துகொண்டே காரியாலயத்திற்குள் சென்றுவிட்டார்.

பின்னர் அரை மணி நேரம் சென்று இருவரும் வெளியே வந்தனர். பிரதமர் தனது காரில் ஏறிச் சென்றுவிட்டார். ஆனால் திரு நடேசன் கார் வரும் வரை வராந்தாவிலே சில நிமிடங்கள் காத்திருக்க வேண்டியதாயிற்று. சத்தியாக்கிரகிகளைப் பார்க்க லஜ்ஜையோ என்னவோ, அவர் கடைசிவரை சத்தியாக்கிரகிகள் பக்கம்கூட ஏறிட்டுப் பார்க்கவில்லை. அவரும் ஓர் இலங்கை—இந்தியர் தானே 'உடன் பிறந்தே கொல்லும் வியாதி''

திரு ஏ. கே. கந்தசாமி இத்தகவலை நமது நிருபரிடம் வெளியிட்டார்.

## பரூக் மாளிகை சர்வகலாசாலையாகும்

கெய்ரோ—

கெய்ரோவிலும் அலெக்ஸாண்டிரியாவிலுமுள்ள மாஜி மன்னர் பரூக்கின் அழகான மாளிகைகள் சர்வகலாசாலைகள் ஆஸ்பத்திரிகள், பள்ளி கூடங்களாக மாற்றப்படலாமென்று தெரிகிறது.

## நேருஜி வாயிலில் அப்துல்லா கொலையாம்!

புதுடில்லி—

ஒரு லாகூர் பத்திரிகையில் வாய் கூசாத பொய் ஒன்று பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. புதுடில்லியிலிருந்து அச் செய்தி கிடைத்ததாகக் கூறப்பட்டிருக்கிறது. அக்கூற்றின் தலைப்பு: "நேருஜியின் ஜாகைக்கு எதிரே ஷேக் அப்துல்லா படுகொலை"— "தாக்கியவர் கைவசமிருந்து ரிவால்வர் பிடிபட்டது'—"சிலர் கைது"

## சீனடி தைலம் என்ன செய்யும்?

குணமில்லாவிட்டால் ரூ. 500 இனாம் கொடுக்கும்'
தினசரி பாவித்துவந்தால் தீரும் வியாதி:

1 அண்டவாய்வு, ஹெர்ணியா வாய்வு.
2 மூலவாய்வு, கிர்மிமூலம், மூலக்கட்டி
3 குடல்வாதம், அபண்டிசய்டிஸ்ஜுரம்.
4 நெஞ்சுநோவு, சளி, இருமல், காசம்
5 உடைவு முறிவு, உளுக்கு சுளுக்கு.
6 பாரிசவாதம், திமிர் வாதம், முடக்குவாதம்
7 முழங்கால் வலி, முதுகு வலி, முல்வலி
8 காதுவலி, பல்வலி, தலைவலி, கபாலவலி
9 வீக்கம், தடிப்பு, சோகை, பாண்டு.
10 நரம்புத்தளர்ச்சி, பலஹீனம்.
11 சொறி, குஷ்டம், புண், கரப்பான், புழுக்கடி
12 இன்னும் பலவித நோய்களைத் தீர்க்கும் ஒரே தைலம் இதுவே பாவிக்கும் முறை மருந்துடன்.



O L. M. Yoosoof
Specialist in Nervous Diseases.

சிறிய போத்தல் தபால் செலவுடன் ரூ 3 50.
பெரிய " " " ரூ. 5-50.

Rahmania Medical Stores
& Dispensary,
327, Dematagoda Road Maradana Colombo-9.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரணவியோகம்

அளவை சரஸ்வதி ஸ்ரோர்ஸ் சொந்தக்காரரான எஸ். எம். கனகரத்தினம் அவர்களின் மாமனார் வ. வேலுப்பிள்ளை (சுப்பர்) அவர்கள் சென்ற 26-7-52 சனிக்கிழமை காலையில் சிவபதமடைந்து அன்று மாலையில் தன்னுலை தெற்கு புட்டிதூ மயானத்தில் தகனம் செய்யப்பட்ட துக்க செய்தியை எங்கள் உற்றார் உறவினர்க்குக் கவலையுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

ச. மா. கனகரத்தினம்
மருமகன்
க. பாக்கியம்மாள்
மகள்

தோட்டு
தன்னுலை தெற்கு
கரவெட்டி.


வரி
விளம்பரம்

வரிஒன்றுக்கு 50 சதம் 6 வரிகளுக்கும் அதற்குக் குறைந்ததற்கும் ரூபாய் 3-00

### தேவை

கொழும்பில் வசிக்கும் ஒரு கண்ணியமான, குழந்தைகள் இல்லாத தமிழ் குடும்பத்திற்கு சமையல் வேலை செய்ய நடுத்தர வயதுடைய வேலைக்காரி தேவை. L A. I. C/o சுதந்திரன்.

வின்ஸ்லோ பாதிரியாரின் தமிழ் ஆங்கில அகராதி தேவை.
எஸ். ஆர். 196, தட்டாதெரு கொழும்பு.

டபிள் டிமை சைஸ் பத்திரிகை அடிக்கக்கூடிய செவில் உடனடியாக தேவை விண்ணப்பிக்க.
மானேஜர், சுதந்திரன் 194, ஏ தட்டாதெரு. கொழும்பு-12.

வேலை செய்யக்கூடிய அச்சாபீஸ் தேவை விலை குறித்து விண்ணப்பிக்கவும்.
L A 202
C/o சுதந்திரன்

நல்ல நிலைமையிலுள்ள சோடா இயந்திரம் தேவை. மிகக் குறைந்த விலை குறித்து எழுதுக
L A. 203
C/o சுதந்திரன்

### வியாபாரம்

மிஸ் கனகம்-புதுமையான நாவல் 35 பக்கங்கள். தெள்ளிய தமிழ்நடை. விற்பனவு ஏஜண்டுகள் தேவை நல்ல கமிஷன் தரப்படும்.
156, தட்டாதெரு, கொழும்பு


## ஹாக்கி ஆட்டம்
### இந்தியரே வெற்றி!

ஹெல்சிங்கி

ஒலிம்பிக ஹாக்கி இறுதி ஆட்டத்தில் இந்திய கோஷ்டி வெற்றி பெற்றது.

இந்திய கோஷ்டி 6 கோல்கள் போட்டு, ஒரு கோல் போட்ட ஹாலந்து கோஷ்டியை தோற்கடித்த

மா. சிதம்பரப்பிள்ளை
செங்கலடி

கே: உமக்கு பத்தாயிர ரூபாய் கொடுத்தால் நீர் யு. என். பியில் சேர்ந்துவிடுவீர் என்கிறார் என் நண்பர்?

ப: "எமை நத்துவாயென எதிரிகள் கோடி இட்டழைத்தாலும் தொடேன்" என்ற பாரதிதாஸன் பரம்பரையைச் சேர்ந்தவர் குயுக்தியார் என்பதை உமது நண்பருக்கு எடுத்துரையும்.

ஃ

என். கறுப்பையா
ஏறாவூர்

கே: என்னை ஒரு பெண் விரும்புகிறாள் நான் வேறு ஒரு பெண்ணை விரும்புகிறேன். அப்பெண் வேறு ஒருவனை விரும்புகிறாள். ஆனால் அவன் என்னை விரும்புகிறவளை விரும்புகிறான் நான் கலியாணம் செய்ய நினைத்தால் தலை சுழலுகிறது ஒரு உபாயம் கூற முடியாதா குயுக்தியாரே?

ப: என் தலை வேறு சுற்றுகிறது. அதனால் உலகம் சுற்றுகிறது. உலகம் நிற்கும்போது உமக்கு உபாயம் சொல்லுகிறேன் அதுவரை காத்திருக்கவேண்டும்.

ஃ

எம். ஆர். சுப்பையா,
மட்டக்குளி

கே: ஒரு ஞாயிற்றுக்கிழமை வெளியாகிய தினசரிப் பத்திரிகையொன்றில் பதவி ஏற்கப் போகும் தபால் மந்திரியாரின் புகைப்படத்தில் மீசையுடனிருந்தார். திங்கட்கிழமை அதே பத்திரிகையில் பதவியேற்ற தபால் மந்திரியின் புகைப்படத்தில் மீசையில்லாமலிருந்தார். இப்பொழுது கனம் மந்திரியாரின் நிலைமை என்ன?

ப: தன் இனம் அழியும்போது யு. என். பி. மந்திரிசபையில் பதவி ஏற்கும் தமிழன் மீசையுள்ள தமிழனாய் இருக்கக் கூடாதென்று அப்பத்திரிகை கருதியதால் மீசையைச் சிரைத்து விட்டதுபோலும்.

ஃ

எம். பாரூக், மாத்தளை

கே: என்னுடன் படிக்கும் மாணவிகள் என்னிடம் பிரியமாகவும் என்னைக் கண்டால் (ஆசிரியர் இல்லாத சமயம்) கண்ணை சிமிட்டுவதும் ஏன்? என்னுடைய அழகுக்கா அல்லது என் பணத்திற்கா?

ப: உம்முடைய அசட்டுத் தனத்தை அவர்கள் அறிந்திருப்பார்கள்.

ஃ

எஸ். சிவபாலசிங்கம்
கிரியெல்ல

கே: பழைய மந்திரி திருநல்லையா டாக்டர் நாகநாதனிடம் சிகிச்சை பெறுவாரா?

ப: டாக்டர் நாகநாதன், சரீர நோய்க்கும் அரசியல் நோய்க்கும் மருந்து செய்வாரே தவிர அதிரசசி நோய்க்கு அவரிடம் ஔஷதம் இல்லை.

ஃ

"சூனா மானா"
மட்டக்களப்பு

கே: சிந்திக்கத் தெரியாதவனை ஒரு சொல்லில், இரண்டு சொல்லில், மூன்று சொல்லில், உம்மால் வர் [illegible]

## கேட்டுப்பாருங்கள்
குயுக்தி

ப: பக்தன்; பரம பக்தன்; சாட்சாத் பரம பக்தன்!

கே: சக்திகளில் மிகச் சிறந்த சக்தியெது?

ப: ஞானிகளுக்கு பராசக்தி! விஞ்ஞானிகளுக்கு அணுசக்தி!

ஃ

★ பி. சிங்காரவேல்,
கொழும்பு.

கே: ஹெல்சிங்கி என்னும் இடத்தில் இப்போது நடைபெற்றுவரும் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள் பலவற்றில் ரஷ்யர்கள் வெல்கிறார்கள். ஆனால் ஓட்டப் பந்தயத்தில் மட்டும் அமெரிக்கர்கள் வெல்லும் காரணம் என்ன?

ப: அமெரிக்கர்கள் இந்த விளையாட்டை ஏற்கனவே கொரியாவில் பயின்றிருப்பார்கள்.

### பரிசு ரூ. 3-00

யாரும் கேள்விகள் அனுப்பலாம். ஆனால் கேள்விகள் போஸ்கார்ட்டில் பட்டுமே எழுதப்படவேண்டும் தகுந்த கேள்விகளுக்கு நிச்சயம் பதில் கிடைக்கும். ஒவ்வொரு வாரமும் கருத்தும் ஹாஸ்யமுமான பதில் கிடைக்கக்கூடிய சிறந்தகேள்வியை அனுப்புவர்களுக்கு ரூ 3-00 பரிசு வழங்கப்படும்.

வின்சென்ற்
புவாக்பிட்டியா

கே: கமத் தொழிலுக்கு முதலிடம் கொடுக்க வேண்டுமென்று யாவரும் கூறுகின்றனர். அப்படியிருக்க நம் நாட்டு நாகரீகப் பெண்கள் இளம் விவசாயிகளை வெறுப்பது ஏன்?

ப: இளம் விவசாயிகளுக்கு இடம் கொடுத்தால் பொறுக்க முடியாதபடி உழுது சகிக்க முடியாதபடி உற்பத்தியைப் பெருக்கி விடுவார்கள் என்ற பயமாயிருக்கலாம்!

ஃ

சி. முத்துலிங்கம்,
கல்முனை.

கே: உலகில் பெண்களால் தாங்கமுடியாதது எது?

ப: தங்கள் கணவன் இன்னொருத்திக்கும் கணவன் என்ற செய்தி.

⁂

எம். வி. எம். ஹனிபா,
கொழும்பு.

கே. இவ்வளவு அழகாக பதில் எழுதும் உங்களுக்கு குழந்தைகள் உண்டா?

ப: ஏன் ஐயா, நீர் ஏதாவது கர்ப்பத்தடை மருந்துக்கு ஏஜண்டா?

⁂

எஸ். என். அப்துல் கரீம்,
கற்பிட்டி.

கே: குயுக்தியாரே பழைய காலத்து நாடகங்களாகிய டம்பாச்சாரி, தூக்குத்தூக்கி போன்ற நாடகங்களை இலங்கையில் எங்கே பார்க்கலாம்.

ப: [illegible] மண்டபத்தில் நமது [illegible] தரலிங்கமும் இருக்கும் வரை இந்த நாடகங்களை [illegible]

க்கு வேறு எங்கும் போகவேண்டாம்

எம். நாச்சியப்பன்,
எகிலியாகொடை

கே: நான் அமெரிக்கா போய்வரலாமென்று விரும்புகிறேன் அதற்கு எவ்வளவு பணம் செலவாகும்?

ப: கொஞ்சம் பொறும் நமது ஒலிவர் இப்போது போயிருக்கிறார் திரும்பியதும் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

⁂

ப. சோ. சேகர்,
ரிக்கில்லகஸ்கொட.

கே: சமீபத்தில் சென்னை முதன் மந்திரியார் நாட்டில் வாழும் இந்தர மக்களை தங்களின் பரம்பரைத் தொழிலை கைவிடாமல் தொடர்ந்து நடத்தும்படி சொல்கிறாரே இது சரியா?

ப: முதலில் ராஜ்ய பாரத்தை க்ஷத்திரியர் வசம் ஒப்படைத்துவிட்டு எங்காவது ஒரு பிள்ளையார் கோவிலில் அவர் மணி கிலுக்க போவாரா என்று அவரிடம் எழுதிக் கேட்டுப் பாரும்.

⁂

இ. பாலசுந்தரம்,
திரிகோணமலை.

கே: ஒவ்வொரு அரசாங்கத்திலும் நிரந்தரமாக இருப்பது எது?

ப: அதிகார மமதை.

கே. ஒவ்வொரு போர் வீரனுடைய வாழ்க்கையிலும் முதலிடம் பெற வேண்டியது எது.

ப: வாள் கை (அதாவது அவனுடைய வாள் ஏந்திய கரம்)

⁂

வி. பி. நல்லதம்பி,
திரிகோணமலை

கே: அரிசி உணவை மாற்றி வேறு உணவுகளை இலங்கை மக்கள் புசிக்க வேண்டும் என்று நமது தற்காலிக உணவு மந்திரி கூறுகிறாரே இதைப்பற்றித் தங்கள் அபிப்பிராயம் என்ன?

ப: குழை சாப்பிடுங்கள் என்றுகூட அவர் சொல்லக் கூடியவர்தான்

⁂

பி. சுப்பையா, பொரளை.

கே: விதி பெரிதா மதி பெரிதா?

ப: பிரம்மச் சாரிகள் தான் விதியா மதியா என்று விவாதித்து மண்டையை உடைப்பார்கள் குடும்பஸ்தரிடம் கேட்டால் இவை எல்லாவற்றிலும் சதிதான் பெரியவள் என்று ஒரே மூச்சில் ஒப்புக்கொண்டுவிடுவார்.

கே: கடவுள் என்றால் என்ன?

ப: இதற்கு உண்மையான பதிலைச் சொன்னேனென்றால் அஹிம்சையில் நம்பிக்கைகொண்ட ஆஸ்திகர்கள் என் மண்டையைப் பிளந்துவிடுவார்கள்.

⁂

சி. பி. தேவா, தெல்லிப்பளை.

கே: ஓர் காதலன் தனது காதலியை அழைக்கும் பொழுது "கண்ணே" என அழைக்கிறானே, அது ஏனோ குயுக்தியாரே!

ப: காதலுக்கு கண் இல்லை என்கிறார்கள். என்று ஒருவன் காதலில் சிக்கினானோ அன்றே அவன் கண்ணை இழந்து விடுகிறான். எனவே அவள் தானே அவனுக்கு கண்ணாகவேண்டும். அதனால்தான்.

⁂

இ. சுந்தரமூர்த்தி,
தம்பிலுவில்

கே: ஐயா குயுக்தியாரே நீர் சந்தர்ப்பவாதியா சமயவாதியா?

ப: பகுத்தறிவுவாதி

⁂

என். ஏ. அப்துல் காதர்,
உப்புவழி

கே: ஓர் பெண் எப்பொழுது நாற்குணங்களையும் இழக்கிறாள்?

ப: படுக்கையறையில் புகும்போது

ஃ

க. கந்தசாமி,
திரிகோணமலை

கே: ஒரு நாட்டின் மதி மந்திரியாகவிருக்கலாம் ஆனால் அவன் மதியிலே மதுவும் மாதுவும் இடம் பெற்று அவன் காலடியின் கீழ் படுகுழிதோண்டும் சதியும் நடைபெற்றால் அவன் நிலை என்னவாகும்?

ப: அவன் நிலை ராஜினாமாவாகும்.

ஃ

ப. க. கனகசபை,
கொடிகாமம

கே: நான் ஒரு பேச்சாளனாக விரும்புகின்றேன் மேடைகளில் ஏறிப் பேசவோ பயமாயிருக்கின்றது இதற்கு என்ன செய்ய வேண்டும்?

ப: அடுத்த பாராளுமன்றத் தேர்தலில் ஒன்றும் யோசியாமல் 1000 ரூபாயைக் கட்டிவிடும். தானாகவே பேச வந்துவிடும்.

ஃ

த. செல்வதுரை, கல்முனை

கே: தமிழ் இலங்கையைப்பற்றி உமது அபிப்பிராயம் என்ன?

ப: தமிழ் இலங்கைக்கு இன்னும் கொஞ்சம் ரோஸம் பிறக்கவேண்டும் என்பதுதான்.

ஃ

எஸ். பி. கிருஷ்ணன்,
மட்டுவில்

கே: உலகில் ஏழை, இழிந்தசாதி என்ற பேதமற்று நாம் ஒவ்வொருவரும் இன்பமாகவாழ ஏற்ற வழி ஒன்று சொல்வீரா?

ப: ஒரு வழி கிடையாது; இரண்டு வழியுண்டு; சமதர்மத்தையும் கலப்புமணத்தையும் கட்டாய சட்டமாக்குவதுதான் அந்த வழிகள்.

ஃ

எம். எஸ். லிங்கம்
கலகிசை

கே: ஜாதி என்றால் என்ன?

ப: நீதியற்ற பேதாபேதம்.

ஃ

எம். வி. மாணிக்கம்
வெள்ளவத்தை

கே: காதல் கலியாணம் செய்பவர்கள் பெரும்பாலும் எலும்பும் தோலுமாய் இருப்பதேன்?

ப: காதலினால் சிந்தித்திருப்பார்கள்.

★ இவ்வாரம் ரூ 3-00 பரிசு பெற்றவர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஏழ்மை வாழ்விலே இன்பம் காணும் கன்னி

காதலிருவர் கருத்தொப்ப ஆதரவு பட்டதுதான் இன்பம். உருவத்தைப் பின் தொடரும் நிழலைப்போல கணவனைத் தொடர்ந்து அவன் ஏற்றத் தாழ்வுகளில்-சுக துக்கங்களில் பங்கெடுத்துக்கொள்ளும் பெண் தான் வாழ்க்கை இன்பத்தை முற்றாக அனுபவிக்கிறாள். கணவன் ஏழை என்பதற்காக அவனை உதாசீனம் செய்து பிறந்த வீட்டுக்குச் செல்லும் பழக்கம் அவளிருக்கும் இடத்தை எட்டிக்கூடப் பார்க்கமாட்டாது புசிக்கப் பிடி உணவு இல்லாவிட்டாலும் அவள் நிறைந்த மனத்துடன்தான் வாழுவாள்.

இப்படியான பெண்மையின் ஒப்பற்றதன்மையைப் படம்பிடித்துக் காட்டும் பாடல்கள் பல பழந்தமிழ் இலக்கியங்களில் உண்டு. ஒரு பெண் கைப்பிடித்த காளை வறுமைச் சாகரத்தில் மூழ்கிக்கொண்டிருந்தான். உடுக்க நல்ல உடை, உண்ண சுவையான உணவு இன்றிக் கஷ்டப்பட்டாலும் அக் கன்னி கணவனை வெறுக்கவில்லை. கஷ்டமான சூழலிலும் அவள் களிப்புடனேயே வாழ்ந்தாள்.

ஒரு தினம் அவளுடன் சிறு வயதிலிருந்தே கூடிப் பழகிய தோழி ஒருத்தி அவளைக் காணச் சென்றிருந்தாள். இயற்கை வளம் கொழிக்கும் நாட்டிலே-செல்வம் செழித்த குடும்பத்திலே சிங்காரப் பண்பாடித் திரிந்த சிற்றிடையாள் வறுமைச் சுழலிலே சிக்கித் தவிப்பதைக் கண்டாள்.

## பிறந்தகத்தைத் தூசென மதிக்கும் புதுமனப் பாங்கு

## இலக்கியப் பூங்காவில் ஒரு மலர்

அவளது நிலையைக் காணத் தோழிக்குச் சகிக்கவில்லை. ஆசைப் பெற்றோர் அருமைச் சகோதரர்-அளவற்ற செல்வம்-இவை நிறைந்த பிறந்தகம் சென்று வாழாமல் கணவனே தஞ்சமென்று ஏன் இப்படிவாழுகின்றாய் பொன்போல பூரித்த உன்மேனி வாடிவிட்டதே! காந்தக் கண்களின் ஒளி-கண்ணாடிக் கன்னத்தின் அழகு தேய்ந்து விட்டதே என்று புலம்பினாள்.

தோழியின் புலம்பல் தலைவிக்குப் பெரிய வேடிக்கையாக இருந்தது. அரசனை கோலேந்தி வித்திட்டு வளம் பெருகும் நாட்டில் வாழ்வதிலும் பார்க்க என் காதற் கணவனுடன் வாழும் வாழ்க்கையையே நான் விரும்புகிறேன் என்று கூறினாள்.

“இரா மழை பெய்த
இராவீரத்து
செங்கோல் வேந்தன்
உழவனுகி
பனை நுகம் கொண்டு
யானை ஏர்பூட்டி
வெள்ளி விதைக்க
பொன்னே விளையினும்
வேண்டேன பிறந்தகத்து
ஈண்டிய வாழ்வே”

இதைக் கூறிய தலைவியின் குரலிலே பெருமை தொனித்தது.

பிறந்தகத்து வாழ்வை விரும்பாததற்குக் காரணம் கணவன் வீட்டில் செல்வம் கொழிக்கிறது என்பதல்ல என்றதையும் தலைவி தோழிக்குக் கூறிவிட விரும்பினாள் கணவனது அன்பு தவிர வேறு சுகம் கிடையாது பெண்ணுக்கு மற்றைய சௌகர்யங்களிலும் பார்க்க அத்தியாவசியம் தேவையானது அதுதான் என்பதையும் கூற ஆசைப்பட்டாள்

தோழீ! இங்கு நாம் நெல் அரிசிச் சோறு புசிப்ப

**ந. பொ. இ**

தில்லை மலையடி வாரத்தில் விளையும் வரகரிசிதான் எங்கள் உணவு அந்த வரகோ நன்கு முற்றாதது. காலை வேளையில் முற்றாத வரகுக் கதிர்களைப் பறித்து மலையடிவாரத்திலே காயவைத்து குற்றி அரிசியாக்குவேன். அதில் ஏற்கனவே கடன் வாங்கிய பங்குகளையெல்லாம் கொடுத்துவிட்டு மிகுதியாக உள்ளதைச் சமைப்பேன். அந்த வரகரிசிச் சோற்றைத் தின்ன கறி வேண்டுமல்லவா? நம்மூரிலே காலாலொதுக்கும் குப்பைக் கீரைதான் நமது கறி ஆனால் அதற்குப் போட உப்பே கிடையாது. அந்தச் சோற்றையும் கறியையும் உண்பதற்கு நம்மிடம் ஏனம் கிடையாது. பக்கத்து வீட்டில் தான் இரவல் வாங்குவோம்.

முற்றாத வரகு—உப்பற்ற கீரை—இரவல் தாலம்—இந்த உணவு கூடத் தினமும் கிடைக்காது. இப்படியிருப்பினும் எனக்கு என் கணவன் வாழ்வுதான் இனிக்கிறது என்று கூறினாள். இந்தக் கவிதைதான் பணச் செருக்கால் அறிவிழந்து கொண்ட கணவனை வெறுக்கும் பெண்களுக்கு ஒரு சாட்டையடி.

“செங்கோல் வரகு பசுங்
குரல் கொய்து
கன்று காத்து குன்றின்
உணக்கி
ஊடு பதர் போக்கி முன்
உதவி னோர்க்குதவி
குப்பைக் கீரை உப்
பின்றி வெந்து
இரவல் தாலம் விரை
வுடனெடுத்து
சோறு கொண்டு பீறல்
அடைத்து
ஒன்றுவிட் டொரு
பொழுதுதின்றேகிடப்பினு
நன்றே தோழி என் [ம்
கொழுநன் வாழ்வே!

கடைசி அடியிலேதான் உயிர் மணக்கிறது தமிழ் பெற்ற கன்னியர்களின் உள்ளம் மணக்கிறது. தமிழிலக்கியத்தின் இனிமை மணக்கிறது.

### சிவானந்த வித்தியாலயத்தில் சுவாமி விபுலானந்தர் விழா

சுவாமி விபுலானந்தர் அவர்களின் மறைவு நாள் சென்ற சனிக்கிழமை சுவாமி நடராஜானந்தா அவர்களின் தலைமையில் அதிவிமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

பஜனை ஆராதனையுடன் ஆரம்பமாகிய விழாவில் சிவானந்த வித்தியாலயம், மட்டக்களப்பு விவேகானந்த வித்தியாலயம், கல்லடி உப்போடை பெண்கள் பாடசாலை, மட்டக்களப்பு அரசினர் ஆசிரிய பயிற்சிக் கல்லூரி ஆகியவற்றின் மாணவ மாணவிகளும் மற்றும் பலரும் கலந்து கொண்டனர்.

திருவாளர்கள்: கோ. கோணேசபிள்ளை, க. நடராஜன், பண்டிதர் ச. பூபாலபிள்ளை ஆகியவர்கள் அடிகளாரின் பெருமைகளைப் பற்றிப் பேசினார்கள்.


திருவாளர்கள்: பரமஹம்ஸதாஸன், கோணேசபிள்ளை ஆகியோரால் விபுலானந்தர் மேல் பாடப்பட்ட பாட்டுக்கள் இசையோடு பாடப்பட்டன. பங்குபற்றிய கல்லூரி மாணவ மாணவிகளும் ஜனுப் சாவல் ஹமீத் அவர்களும் இசைவிருந்தளித்தனர்.

செல்வன் பி. சண்முகத்தின் நன்றியுரையுடன் விழா முடிவுற்றது.



‘பாரத தேவி’
விமானப் பதிப்பு
விலை சதம் 10



விவசாயம், கைத்தொழில் முதலானவைக்கு வேண்டிய
இணையற்ற இயந்திரங்கள்




“வாம்பேட்ஸ்”
தானே இயங்கும் இயந்திரங்கள், தானியம்
அரைக்கும் இயந்திரங்கள்
உங்களுடைய அரிசி, வாகு, மிளகு, கோப்பி
கொக்கோ முதலியவை அரைப்பதற்கும்,
மருந்து மூலிகள் அரைப்பதற்கும் மேற்
குறித்த யந்திரங்கள் கைதேர்ந்தவை.
எங்களிடம் ஏராளமான இயந்திரங்களும்
அவற்றின் இணைக் கருவிகளும்
இருக்கின்றன.



உங்கள் தேவைகட்கு எங்களிடம் வாருங்கள்.
இலேசாக இயங்கக்கூடியவை. மிகவும் சக்திவாய்ந்தவை.
நீண்டகால உழைப்பு.
சாமுவேல், சன்ஸ் அன் கம்பெனி, லிமிட்டெட்,
371, பழைய சோனகத் தெரு, கொழும்பு.
டெலிபோன்: 2341. டெலிகிராம்: “எச்அயர்ன்”


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# தமிழ் சினிமா உலகில் அதிர்ச்சிதரும் செய்தி.

சிலோன் தியேட்டர் சர்க்கியூட்டாரால் தற்போது திரையிடப்படும்

## முதல் தமிழ் டெக்னிக் கலர் வர்ணப்படம்

தினசரி பிற்பகல் 2 மணி, மாலை 6 மணி இரவு 9-30 மணி சனி-ஞாயிறு காலை 10 மணிக்காட்சிகள்.


| எல்பின்ஸ்டன் (மருதானை) | ரொக்ஸி (வெள்ளவத்தை) | செல்லமஹால் (கொழும்பு) |
|---|---|---|



ஐம்பது லட்சம் ரூபா செலவில்
ஆயிரக்கணக்கானோரைக் கொண்டு
உருவாக்கப்பட்ட பிரமாண்டமான தயாரிப்பு.

சங்கீதம் :
நௌஷாத்

பாடல்:
கம்பதாசன்



டைரக்ஷன்
மெஹ்பூப்

வசனம் :
பி. எஸ். ராமையா.



## திரைஉலகில் முதல்தர நட்சத்திரங்கள் தோன்றும

நெல்ஸன்
(திருகோணமலை)
தினசரி மாலை 6 மணி 9-30 மணி
சனி-ஞாயிறு பிற்பகல் 2 மணி
ஞாயிறு காலை 10 மணி

அசோகமாலா
(நீர்கொழும்பு)
தினசரி மாலை 6 மணி 9-30 மணி
சனி-ஞாயிறு பிற்பகல் 2 மணி
ஞாயிறு காலை 10 மணி



# ஆன்

அல்லது

# கௌரவம்



முடி மன்னனை எதிர்த்துக்
குடி மக்கள் கொதித்தெழுந்தனர்
அதன் முடிவு......?

காதல் தெய்வத்தின் சன்னிதானத்தில்
தன் உயிரைப் பணயம் வைத்தாள்
அவள்கண்டது..........?

நடிகர்கள்:
**திலிப்குமார், பிரேம்நாத், முக்ரி, முராத்.**


8ம் திகதி முதல்
**வேல்ஸ்**
[கண்டி]



நடிகைகள்:
**நிம்மி, குக்கூ. புதுமுகம் நாதிரா, ஷிலாநாயக்**

**வின்ஸர்**
[யாழ்ப்பாணம்]
தினசரி மாலை 6 மணி 9-30 மணி
சனி-ஞாயிறு பிற்பகல் 2 மணி
ஞாயிறு காலை 10 மணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




(தொடர் நவீனம்)

## கள்ளக் காதலர்

மல்லிகைத் தோட்டக் காரியர் சமரவீராவின் மனைவி பிரேமாவதி பத்து மணிக்குப் படுக்கை விட்டெழுந்து அவசர அவசரமாக தன்னை அலங்கரித்துக்கொண்டு யாருடைய வரவையோ எதிர்பார்த்துக் கொண்டிருந்தாளென்றும் அப்பொழுது வாசலில் பூட்ஸ் சப்தம் கேட்டதென்றும் முதல் அத்தியாயத்தில் படித்தது வாசகர்களுக்கு ஞாபகமிருக்கலாம். அவள் எதிர்பார்த்தது வேறு யாரையுமில்லை; அத்தோட்ட சூபபிரண்டான டக்ளஸ் துரையைத்தான். அங்கு வந்த ஆசாமியும் அவனேதான்

டக்ளஸ் துரை நல்ல வாட்டசாட்டமான ஆசாமி, வெள்ளைக்காரர்கள் எல்லோருமே பொதுவாக நல்ல திடகாத்திரமான தேகமுள்ளவர்கள். டக்ளஸ் அதற்கு விதிவிலக்கல்ல. வயது நாற்பது இருக்கும் ஆனால் ஆளைப் பார்த்தால் முப்பதைத் தாண்டுமேல் மதிப்பிடமுடியாது. கையில் எப்பொழுதும் ஒரு அழகான கைத்தடி வைத்திருப்பான் கையில் அந்தத் தடியில்லாமல் துரை எங்குமே போகமாட்டான் யானைத் தந்தத்தில் கடைந்தெடுத்த அந்தக் கம்பின் கைப்பிடி பாம்பின் தலைபோல் செதுக்கப்பட்டிருந்தது. பாம்பின் கண்களுக்கு விலையுயர்ந்த மணிகள் வைக்கப்பட்டிருந்தன. கப்புப்பூராவும் இடையிடையே தங்கப் பூண்கள் போடப்பட்டிருந்தன அந்தக் கைத் தடி மிகவும் விலை மதிப்புள்ள பொருள் என்பது அதைப் பார்த்த மாத்திரத்தில் தெரிந்துவிடும்

பிரபச்சாரியான டக்ளஸ் துரை அந்தப் பட்டிக் காட்டுத் தோட்டத்தில் பிரேமாவதியின் நட்பை சம்பாதித்துக் கொண்டான். வெள்ளைக்காரர்கள் வெறுமனே உழைப்பதிலும் உண்பதிலும் உடுப்பதிலும் திருப்தியடைந்து விடமாட்டார்கள் ஆடவர்களைக் கண்டதும் பெண்கள் கதவுகளுக்குப் பின்னால் ஒழிந்து கொள்வது நம் நாட்டுக் கலாசாரம் ஆணும் பெண்ணும் சரிநிகர் சமானமாக குடித்துக் கூத்தாடுவதுதான் வெள்ளைக்கார நாகரீகம். அந்த நாகரீகத்தில் திளைத்த டக்ளஸுக்கு தோட்டக் காட்டு வாழ்க்கை கண்ணைக்கட்டி காட்டில்விட்ட மாதிரியிருந்தது.

பிரேமாவதியும் தோட்டக் காட்டு உத்தியோகத்தனுக்கு வாழ்க்கைப்பட

வேண்டியவளல்ல. விதியின் விளையாட்டால் அவள் சமரவீராவின் மனைவியானாலும் அவளுடைய உள்ளம் சதா பட்டண வாழ்க்கையை விரும்பித் தவித்தது.

அவள் பட்டணத்தில் வாழ்க்கைப்பட்டிருந்தால், இன்றைய சமுதாய அமைப்பின் ஒரு பெரும் தாரகை இருப்பாள் அதற்குவேண்டிய சகல யோக்யதாம்சங்களும் பிரேமாவதியிடமிருந்தன காட்டு ரோஜா போலவும் பாலைவனத்து நிலவு போலவும் அவளுடைய வாழ்க்கை அனுபவிக்க யாருமில்லாமல் அவலநிலையிலிருந்தபோது டக்ளஸ் துரை அவள் வாழ்வில் குறுக்கிட்டான். டக்ளஸின் சகவாசம் பிரேமாவதிக்கும் பிரேமாவதியின் நட்பு டக்ளஸுக்கும் பிடித்திருந்தது. உச்சி வெய்யிலில் நடுக் கடலில் படகில் செல்பவன் நீர்வேட்கை தாங்கமாட்டாது கடல் நீரைக் கையில் மொண்டு தாக சாந்திசெய்து கொள்வது பால பெண்ணினத்தின் சகவாசத்தை விரும்பிய டக்ளஸ் பிரேமாவதியின் நட்பில் இன்பங்கண்டான்; பெரிய மனிதர்களின் உறவை நாடிய பிரேமாவதியின் உள்ளமும் டக்ளஸின் வருகையால் குதூகலமடைந்தது

டக்ளஸ்-பிரேமாவதி சமாச்சாரம் ஊரறிந்த ரகசியமாக இருந்துவந்தது. டக்ளஸ் என்ன சமான்ய மனிதனா? வெள்ளைக்காரன்! அதோடு ஒரு தோட்ட சூபிரண்டு. ஊரவர்களுக்கு அவன் ஏன் பயப்படப் போகிறான்? பிரேமாவதியும் அதே ரகம்தான். ஊரவர்களுக்குப் பயந்து அவள் தன் வாழ்க்கையை பாழடித்துக்கொள்வதா? கொண்ட கணவனோ பரம சாது இதுவரை அவளைக் கண்டித்து ஒரு வார்த்தை சொன்னது கிடையாது. அவனுடைய கண்ணுக்கு முன்னால் நல்லவளாக நடந்துகொண்டால் போதுமென்ற கொள்கையுடையவன். சமரவீரா, தான் உண்டு தன் உத்தியோகமுண்டு என்ற தோரணையில் நடந்துகொண்டான். அவன் டக்ளஸைப் பற்றியாவது பிரேமாவதியைப் பற்றியாவது கவலைப்படவில்லை.


கள்ளக் காதலர்கள் களகுஷியாக காலங் கழித்தனர். முதல் நாள் அவன் காரியார்த்தமாக கொழும்புக்குப் போயிருந்தான். பிரேமாவதி ஆசையாக அவனிடம் ஒரு முத்து மாலை வேண்டுமென்று கேட்டிருந்தாள். அவள் கேட்டு அவன் இல்லை என்றது கிடையாது அதனால் தான் அவள் அன்று காலை அவனையும் முத்துமாலையையும் எதிர்பார்த்தாள். அவள் எதிர்பார்த்தபடி அவன் வந்துவிட்டான்.

"ஹலோ, கம் இன்" (வாருங்கள் உள்ளே) என்று வீணையின் நாதம் போன்ற குரலில் வரவேற்று முத்துப் பற்கள் தெரிய முறுவலித்தாள்.

"அலங்காரம் ஜோராயிருக்கே!" என்று கூறி அவளுடைய மாம்பழக் கதுப்புக் கன்னத்தை லேசாக கிள்ளினான் டக்ளஸ்.

(6-ம் பக்கம் பார்க்க)


வேல்விழாவுக்கு விஜயம் செய்யும்போது உங்கள் தேகசுகத்தையும் கொஞ்சம் கவனியுங்கள்.



சுவர் இருந்தால்தான் சித்திரம் எழுதலாம் தேக சித்தி பெற்றவரே யோக சித்தி பெறுவார் சக்தியுடையவரால்தான் பக்தி செய்ய முடியும்

எனவே

சகல ரோகங்களிலுமிருந்து விடுபட்டு, இழந்த சக்தியை இரண்டே வேளையில் பெற்று மகிழ்வதற்கு மிஞ்ச புகழ்வாய்ந்த எங்கள் பஞ்ச ஔஷதங்களையும் ஒருமுறை பரீட்சித்துப் பாருங்கள்.



பல போலி ரசம் வெளிக்கிளம்பி இருப்பதால் எமது சென்ற் மேரி வைத்தியசாலையிலுள்ள மருந்துதானாவென்று கவனித்து வாங்குங்கள்

இரண்டே வேளையில்குணம் காணலாம்

சஞ்சீவி ரசம்

நாள்பட்ட இருமல்கள், புகைச்சல், பந்தாரகாசம், காச இளைப்பு, சளிக்கட்டு இழுப்பு, மூச்சுத் திணறல் நெஞ்சுவலி, மேல் கைகால் வலி அசதி, பித்தமயக்கம் வயிற்று வலி, பசியின்மை, இடுப்பு வலி, முதுகுவலி நாள்பட்ட வாய்வு ரோகங்கள் எல்லாம் தீரும்

விலை ரூ 6-50
வி. பி. பி தபால் செலவு வேறு.

நரம்புச் சக்தி இருதய பலமும் பெருமி

நரம்புப் பலவீனமும், மூளை பலவீனம், மறதி, மயக்கம் தூக்கமின்மை மூலச்சூடு, இரத்தக் கொதிப்பு, தேக வரட்சி, ஊறல் தடிப்பு உஷ்ணம் முதுகுவலி இடுப்புவலி உடம்பு கைகால் வலி அசதி பசியின்மை வயிற்று நோவு நெஞ்சுநோவு இருதய துடிப்பு நாள்பட்ட வாய்வு ரோகங்களை நீக்கி தேக சக்தியை அதிகப்படுத்தும்.

விலை ரூ 6-50
வி. பி. பி. தபால் செலவு வேறு.

வலியங்காடி லேகியம்

இதனால் தீரும் வியாதிகள்:- வாதம். விஷ வாதப் கால்முடக்கு, கைமுடக்கு பிள்ளைவாதம், எலும்பு வாதம், பித்தம், ஜுரம் குன்மம் தலை வாய்வு சூலை, கண்டமாலை, கிராந்தி பைத்தியம் சூலைரோகம், செங்கரப்பன், அண்டவாயு (ஆசனவாய்வு, ஆந்திரவாய்வு நெஞ்சு அடைப்பு வயிற்றுவலி வயிற்று பொருமல், சல்லடைப்பு, காளைவு, தமிர் வாதம், காசகைவலி, முதுகுவலி இவைகளும் அநேக நோய்களை நீக்கி தேகமதை பொன்போலாகும்.

24 வேளை மருந்து
ரூ. 8-50

நேத்திர குமரிதைலம்

பலவித நோயால் அவஸ்தைப்படும் அன்பர்களுக்கோர் அரிய சந்தர்ப்பம் தேகத்தில் உஷ்ணம் மிஞ்சி தலைநோவு, பித்தம், பைத்தியம், கிறுகிறுப்பு, காங்கை, சூலை, சோகை, சாமாலை, பீனிசம், கபால வாய்வு, வஷவாதம் கோவைகட்டி, வெளுப்பு, ரோமம் உதிர்தல், நரை பயிர், கண் எரிவு, கண் பார்வை குறைவு முதலிய வியாதிகளால் கஷ்டப்படுபவர்கள் இத் தைலத்தை உபயோகித்தால் சூரியனைக் கண்ட பனிபோல வியாதி குணமடையும்.

பெரியது ரூ 4-00
சிறியது ரூ 2-00

பெண்களுக்கு ஓர் மகா சஞ்சீவி

சூதகவயிற்றுவலி, சூதக வாய்வு, கெர்ப்பப் பூச்சி தலைவலி, மயக்கம், ஏப்பம், படபடப்பு, திரேகம் பூரித்தல் குத்தல், உளைவு சோம்பல், ஆயாசம், உஷ்ணம் பலவீனம், சகலவாய்வுத் தொந்தரவுகளும், விலக்கம் மிகுதியாய்ப் போகிறவர்களுக்கும் கொஞ்சம் கண்டு மறந்து போகிறவர்களுக்கும்.

"கெர்ப்பக்கோள் நிவாரணி"யை

உபயோகிக்கக் குணமாகும்.
பத்தியமில்லை.

விலை ரூ 7-75
வி. பி. பி தபால் செலவு வேறு.

சென்ற் மேரி வைத்தியசாலை, 201, செட்டியார் தெரு, கொழும்பு,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலத்தேவையைப் பூர்த்தி செய்ய அரசாங்கம் என்ன செய்தது?

## புள்ளி விவரம் எதுவுமின்றி நிதி மந்திரியின் மழுப்பல்

### திரு. வன்னியசிங்கத்தின் வரவு செலவுத்திட்ட பிரசங்கம

இரண்டு வாரங்களுக்கு முன்பு அதாவது 22-7-52 செவ்வாய்க் கிழமை வரவு செலவு திட்டத்தின்மீது நடைபெற்ற விவாதத்தின்போது கோப்பாய் பிரதிநிதி திரு வன்னியசிங்கம் பேசியதாவது:-


தற்காலீக விவசாய மந்திரி சபையில் கூறிய சில விஷயங்களுக்கு பதிலளிக்க விரும்புகிறேன். அவரது சிறிய பிரசங்கத்தில் சில வேடிக்கையான விஷயங்களையும் தன்னை மறந்து கூறிவிட்டார் உதாரணமாக, அரசாங்கப் பிரதிநிதிகள் சார்பாகபேசிய அவர், இந்நாட்டின் ஜனத்தொகை அதிகரித்ததற்கு தாங்கள்தான் ஜவாப்தாரிஎன்று கூறினர். அவர்களின் இந்த மகத்தான நடவடிக்கைகளுக்காக, அதாவது குழந்தைப் பிறப்பு அதிகரிக்கும்படி செய்த பெருமையை அவர்களுக்கே அளிப்பதற்கு நாங்கள் தயார்.

யு. என். பி. சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டதாக அவர் குறிப்பிட்டார். அவரும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு முதலில் எப்படி கட்சி விட்டு கட்சி மாறி பிலபு பாராளுமன்றகாரியதரிசியாகி, பின்னர் தற்காலீக மந்திரியானுர் என்பதையும் ஞாபகப் படுத்தினர் அது ஒருபுறமிருக்க. இன்னும் ஓரிரு விஷயங்களைக் குறிப்பிட விரும்புகிறேன்

முதலாவதாக, அரிசி அதிகமாக நாம் இறக்குமதி செய்வதால் உணவுப் பொருட்களின் விலைவாசிகள் உயர்ந்து விட்டனவென்று எனது மதிப்பிற்குரிய நண்பர் விவாதித்தார். புள்ளி விவரங்களையும் சுட்டிக் காட்டினர் அதே சமயத்தில் மாவு இறக்குமதி நிரப்டவும் குறைந்துவிட்டதால் நாட்டிலே தானிய உற்பத்தி அதிகரித்து விட்டதென்றும் கூறனுர் உண்மையில் இது முரண்பாடான பேச்சாகும். அரிசி இறக்குமதி அதிகரித்து, மாவு இறக்குமதி குறைந்திருந்தால் அதன அர்த்தம் இந்நாட்டு மக்கள் மாவைக் காட்டிலும் அரிசியை விரும்புகிறுர்களென்பது தான். இறக்குமதி செய்யப்பட்ட மாவு மனித உபயோகத்திற்கு லாயக்கற்றதென்று அரசாங்கம் கூறுகிறது. ஒரு குறித்தல் மாவு ஒரு சத விகித விற்பனை செய்யத் தயாரென்று தற்காலீக உணவு மந்திரியே குறிப்பிடுகிறுர்.

### புரளுன பேச்சு

இலைகளின்று இந்நாட்டில் மேற சாகுபடி அதிகரித்து விட்டதென்று நாம் ஏற்றுக் கொள்ள வேண்டுமாம்! அப்படியானல் உண்மையான புள்ளி விபரங்கள் யாவை? 1947ம் ஆண்டு உற்பத்தியையும், இன்றைய உற்பத்தியையும் நாங்கள் தெரிந்து கொள்ள அவர்களுக்கு புள்ளி விவரங்கள் சமர்ப்பிக்க முடியுமா? இது விஷயமாக நம்பிக்கையான தகவல்கள் எங்களுக்கு கொடுக்கப்படவில்லை. தற்காலிக உணவு மந்திரி நாட்டில் உற்பத்தி



திரு வன்னியசிங்கம்

அதிகரித்து விட்டதென்று எந்தப்புள்ளி விவரங்களைக் கொண்டு கூறுகிறுர்? தொழிலாளிக்குஒன்றேகால்கொத்துஅரிசிதான் ரேஷன்கொடுக்கப்படுகிறது. ஆகவே அவன் தனக்குத் தேவையான அரிசியை பகிரங்க மார்க்கட்டில் அதிக விலை கொடுத்து வாங்கவேண்டியிருக்கிறது.

பாகிஸதான் நமக்கு அரிசி அதிகமாக அனுப்புவதாகக் கொடுத்த வாக்குறுதியை அதனுல் காப்பாற்றமுடியவில்லையென்று அவர் கூறினுர். ஆதலால் இந்நாட்டில் அரிசி உற்பத்தி அதிகரித்துவிட்டதென்று நாம் ஏற்றுக் கொள்ள வேண்டுமாம்.

திரு குமாரஸவாமி:- நிச்சயமாக கடந்த இரு வருடங்களைவிட இவ்வருடம் உற்பத்தி குறைவுதான்.

திரு வன்னியசிங்கம்:— எனது மதிப்புக்குரிய நண்பரே கூறுகிறுர். அரிசி உற்பத்தி நிச்சயமாகக் குறைந்து விட்டதென்று.

திரு குமாரஸ்வாமி:- அப்படித்தான பஞ்ச நிலைமை தான் அதற்குக் காரணம்.

திரு வன்னியசிங்கம்:— குறைவாக உற்பத்தி செய்தகன பெருமை அவரைச் சாரந்ததாகும். இந்த நாடு ஒரு பஞ்ச நிலைமையின் வழியில் நிற்கிறதென்று உண்மையாக கூறியதற்காக அவருக்கு எனது வணக்கம.

### நிலத்தேவை

புதிய நிலங்களை சாகுபடிக்கு கொண்டு வருவதன் மூலமாகவும், இந்நெருக்கடி அதிகமுள்ள

(9-ம் பக்கம் பார்க்க)

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

## ரஞ்சிதம்

அவனுடைய கையை விடுவித்து கிள்ளிய விரல்களை இறுக்கிப் பிடித்த வண்ணம் அருகிலிருந்த சோபாவுக்கு அவனை அழைத்துச் சென்றுள். நாணமும் சந்தோஷமும் அவளுடைய முகத்தை இரத்தச் சிவப்பாக்கி அழகு செய்தன. கோவைப் பழம் போன்ற அவளுடைய சிவந்த உதடுகளும விம்மிப் புடைத்த மார்புகளும் துரையின் உள்ளத்தை வாள் கொண்டறுத்தன. அவன் வைத்த கண் வாங்காமல் அவளுடைய செளந்தர்யத்தை ரஸித்தான்.

"ஒண் மினிட (ஒரு நிமிஷம் இருங்கள்) இதோ வந்திட்டேன்" என்று கூறி சிட்டுக் குருவிபோல பறந்துசென்று மற்றும் ஒரு உடையை மாற்றிக் கொண்டு இரண்டு "கப்" டீயுடன் திரும்பிவந்தாள்

துரை சட்டைப் பையில் கையைவிட்டு ஒரு அழகிய பெட்டியை எடுத்தார். அதில் என்ன இருக்கின்றதென்பதைக் காணும் ஆவலால் பிரேமாவதியின உள்ளம் துள்ளிக் குதித்தது. அவளுடைய கயல் விழிகள் துரையையும அந்த அழகிய பெட்டியையும் மாறி மாறிப் பார்த்தன.

துரை அந்தப் பெட்டியைத் திறந்து முத்துச் சரத்தை அவளுடைய முகத்துக்கெதிரில் பிடித்தார் அந்த முத்துச்சரம் பிரேமாவின் பல் வரிசையோடு போட்டி போட்டது டக்ளஸ் அந்த மாலையை பெட்டியிலிருந்து எடுத்து பிரேமாவின் அழகிய கழுத்தில் அணிந்தான். நடுவில் கோத்திருந்த பதக்கத்தை இழுத்து மையப்படுத்திவிட்டான். வெட்கத்தினுல் அவளுடைய கன்னங்கள் சிவந்தன.

அப்பொழுது வாயில் கதவை யாரோ "தட தட" வென்று தட்டினுர்கள்.

பிரேமாவதி போய்க் கதவைத் திறந்தாள்.

கங்காணி கருப்பண்ணன் கையைப் பிசைந்து கொண்டு நின்றுன்.

"கங்காணியா! என்ன இந்த நேரத்தில்—இந்தப் பக்கம்வந்தது"

"இல்லே! நோனுகிட்ட விஷயம் பேசணுமுங்க அதுதான்.........." என்று இழுத்தான் கருப்பண்ணன்.

இந்தச் சனியன் இப்போதைக்குத் தொலையாதென்று மனதுக்குள் சபித்துக் கொண்டு "என்ன சமாச்சாரம்" என்று கேட்டாள் பிரேமாவதி.

கிறீன் எஸ்டேட் கங்காணி மாரிமுத்து இருக்காரோ இல்லேயோ அவருடைய மகன் சுந்தரத்துக்கு என்னுடைய மவ மீனுட்சியை கட்டிவைக்கணுமினு எனக்கு ரொம்ப நாளா ஆசையின்னு முன்னமே உங்ககிட்ட சொன்னேனில்லிங்களா? அந்தப் பையன் இப்போது பீ. ஏ. பரீக்ஷை எழுதிட்டு வாரானுங்க. அவனுக்கு நம்ம தோட்டத்திலே ஒரு வேலே எடுத்துக் கொடுத்தா ரொம்பவும் உதவியாயிருக்குங்க

"அதுக்கென்ன கங்காணி நான் ஐயாகிட்ட சொல்றன்"

'ஐயாகிட்டே சொல்லிப் பயனில்லேங்க. துரைகிட்ட சொல்லணும."

இதைக் கேட்டதும் பிரேமாவதிக்கு மனம் "திக்' என்றது. துரைக்கும் தனக்குமிடையிலுள்ள நட்பு கங்காணிக்கு தெரிந்திருக்கின்றதென்பதற்காக அவள் பயப்படவில்லே. நெற்றிக்கு நேரே துரையையும் தன்னையும் சம்பந்தப்படுத்தி பேசியது ஒருவித காரணமில்லாத திகிலே உண்டுபண்ணிற்று.

மலேயிலே நின்று தொழிலாளிகளை மேற்பார்வையிட்டுக்கொண்டிருந்த கங்காணியின் கழுகுப்பார்வையில், டக்ளஸ் பிரேமாவதி வீட்டில் நுழைந்தது பட்டுவிட்டது. சுந்தரத்துக்கு அந்த எஸ்டேட்டில் எஸ் டி. (சின்னத்துரை) உத்தியோகம் கொடுக்கும்படி பெரிய துரையைக் கேட்க வேணுமென்று கருப்பண்ணனுக்கு நெடுநாளாக ஆசை. ஆனல் துரையை நேரில் சந்தித்துப் பேசத் தைரியமில்லே அதனுல் இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தனது மனதிலுள்ளதை துரைக்கு தெரிவித்துவிடவே அவன் அங்கு வந்தான்.

"துரைகிட்ட சொல்லணுமா? அவரை நான் எங்கே................"

"நோனு அப்படிச் சொல்லப்படாதுங்க துரைதான் அடிக்கடி இங்கே வருவாராச்சே. நீங்க சொன்னு அப்புறம் காரியம் கைகூடின மாதிரிதானுங்க. துரை ரொமப தங்கமான மனுஷராச்சே இந்த தோட்டம் செய்த புண்ணியந்தான் அந்த மவராசன் இந்த தோட்டத்துக்குத் துரையாக வந்தாரு" என்று உள்ளேயிருந்த துரையின் காதில் விழும்படி கங்காணி உரத்துச் சொன்னுன்.

பிரேமாவதி பாடு தர்ம சங்கடமாயிற்று. பக்கத்திலிருந்து பார்த்தவன்மாதிரியல்லவா இவன் கதைக்கிறுன் என்று மனதில் எண்ணிக்கொண்டு "சரி அவரு இந்தப் பக்கம் வந்தால சொல்லிப் பார்க்கிறேன்' என்றுள்.

"வராமலுக்கு எங்கே போவாரு: இந்தத் தோட்டத்திலே உங்களைப்போலே பெரிய மனுஷாள் யார் இருக்கிறுங்க? உங்க தங்கமான மனசுப் துணமும் வேறு யாருக்கு இருக்கு. அதுனலேதான் வேறு ஒருத்தர் பங்களாவையும் எட்டிக்கூடப் பார்க்காத துரை உங்க பங்களாவுக்கு வாரார், இருக்கிறுர், பேசுறுர், உங்கைக் காப்பியைக் கொடுத்தால் குடிக்கிறுர்..........என்று நீட்டி முழக்கிக்கொண்டுபோனுன் கருப்பண்ணன்.

பிரேமாவதி அவனை இடைமறித்து ஐயா சாப்பாட்டுக்கு வார நேரமாச்சு. எனக்கு உள்ளே கொஞ்சம் வேலேயிருக்கு நீ போ. துரை வந்தால் நான் சொல்றேன்' என்று சம்பாஷணைக்கு முற்றுப் புள்ளி வைத்தாள்

"சரிங்க. நான் வாரேனுங்க" என்று கூறி கங்காணி போய்விட்டான்

பிரேமாவதி உள்ளே திரும்பிச் சென்றதும் துரை 'கடகட'வென்று சிரித்தார். "கங்காணி மச்சம் நல்ல மாதிரி மனுஷன். அவனுக்கு உபகாரம் செய்வது எனக்கு நல்ல பிரியம். அந்தப் பையனை உடனே இங்கே வரச் சொல்லி காகிதம் எழுதப் போடச் சொல்லி கங்காணி கிட்டே சொல்லு பிரேமா" என்று கூறிவிட்டு கைத்தடியை எடுத்துக்கொண்டு வெளியே சென்றுன டக்ளஸ்.




டக்ளஸ் துரை அந்தப் பெட்டியைத் திறந்து முத்துச் சரத்தை அவளுடைய முகத்துக்கெதிரில பிடித்தார். அந்த முத்துச்சரம் பிரேமாவின் பல் வரிசையோடு போட்டி போட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரூக் மன்னர் பட்டம் துறந்து பரதேசம் சென்றார்

# எகிப்தில் மனித பூகம்பம்




## ராணுவப் புரட்சிக்குப் பின்னால் மக்கள் சக்தி

ராணுவப் புரட்சி என்பது தென் அமெரிக்க நாடுகளிலே அடிக்கடி ஏற்படும் சாதாரண சம்பவம். அதைப்பற்றி உலக மக்கள் கவலைப்படுவதில்லை. ஆனால் கடந்த வாரம் எகிப்தில் நடைபெற்ற ராணுவப் புரட்சி மத்தியக் கிழக்கிலே ஒரு பெரிய மாறுதலை ஏற்படுத்தி விட்டது.

ஜெனரல் நகீப் என்ற ராணுவத் தளபதியின் தலைமையில் நடைபெற்ற இப்புரட்சி நன்கு திட்டமிடப்பட்ட இரு கட்டங்களைக் கொண்டதாகும். ஒன்று "ஆட்சியைக் கைப்பற்றும் நடவடிக்கை" மற்றொன்று "மாளிகை நடவடிக்கை" இவ்விரு நடவடிக்கைகளும் ஒரு சொட்டு இரத்தம் சிந்தாமல் நிறைவேறின. மக்கள் ஆதரவு இருந்தாலே தவிர ராணுவப் புரட்சியொன்று இரத்தம் சிந்தாமல் நடைபெறுவது சாத்தியமன்று.

முதலாவது ராணுவ நடவடிக்கையில் ராணுவத்தின் கையில் அரசாங்க ஆதிக்கம் வீழ்ச்சியடைந்தது. இரண்டாவது நடவடிக்கையில் பாரூக் மன்னர் பதவி பிடுங்கப்பட்டு நாடு கடத்தப்பட்டார்.

### மக்கள் ஆதரவு

மக்களிடம் செல்வாக்கு மிகுந்த வாப்து கட்சிக்கும் (தேசீயக் கட்சி) இப்புரட்சிக்கும் சம்பந்த முண்டென்பதும் தெளிவாகிறது. ஏனைய தேசியத் தலைவர்களும், ஏன் பிரதமரும்கூட இப்புரட்சிக்கு ஆதரவளித்துள்ளனர். புரட்சி சமயத்தில் பிரதம சேனாதிபதியாக தன்னைப் பிரகடனப் படுத்திக் கொண்ட தளபதி நகீப் புரட்சி பூர்த்தியானதும் பிரதமதளபதி பதவியை ராஜினாமா செய்துவிட்டு, மீண்டும் முன்போல சாதாரண ஜெனரலாகிவிட்டார். இதிலிருந்து அவர் தனக்கு அதிகாரம் வேண்டுமென்பதற்காக புரட்சியை நடத்தவில்லையென்று தெரிகிறது. புரட்சி சமயத்தில் நகரங்களில் வீதிகளின் இரு புறங்களிலும் ஜனங்கள் கூடி நின்று துருப்புகளை வரவேற்று சந்தோஷ ஆரவாரம் செய்தனர். "எகிப்தின் விடுதலைத் தலைவர் நகீப் வாழ்க!" என்ற கோஷங்களும் முழங்கப்பட்டன. மாடி முற்றங்களில் பெண்டிரும் கூடி நின்று சந்தோஷ ஒலி எழுப்பி ராணுவத்தினரை வரவேற்றனர். இதிலிருந்து ராணுவப் புரட்சிக்கு எகிப்திய மக்களின் ஆதரவு உண்டென்பது தெளிவாகிறது. இதற்குக் காரணமென்ன?

### வீழ்ச்சிக்குக் காரணம்

சில வருடங்களாக எகிப்து மன்னர் நாட்டு மக்களின் அதிருப்திக்கு ஆளாகிவிட்டார். 1950 முதல் அவருக்குச் சீட்டுக் கிழிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன. 1948ல் அவர் தனது முதல் மனைவி ராணி பரீதாவை விவாகரத்து செய்ததை மக்கள் எதிர்த்தனர். பின்னர் கல்வி இலாகா காரியதரிசி ஒருவரின் மகள் நரிமனை மணந்து கொண்டதையும் மக்கள் ஆதரிக்கவில்லை. நாட்டு மக்களை வறுமை பிடுங்கித் தின்ன, மன்னன் ஐரோப்பிய நாடுகளிலே சூது விளையாட்டிலும், வினோதக் களியாட்டங்களிலும் ஈடுபட்டிருந்தது ஜனங்களின் வெறுப்புணர்ச்சியைக் கிளறிவிட்டது. எகிப்திலே நிலப்பிரபுத்துவம் விவசாயிகளை நசுக்கிப் பிழிகிறது. ஒரு சிலர் செல்வம் முழுவதையும் கைப்பற்றிக்கொண்டு, இந்திரபோக வாழ்க்கையில் மிதக்க, பெரும்பாலான மக்கள் போதுமான உணவு உடையின்றி நரகவாழ்க்கை நடத்துகின்றனர். ஏன்? பாரூக் மன்னர்கூட இரண்டு லட்சம் ஏக்கர் நிலங்களையுடைய ஒரு நிலப்பிரபுதானே. ஆகவே அவரால் மக்களின் நிலப்பசியைத் தீர்க்க முடியாமல் போனது ஆச்சரியமன்று. அதுமட்டுமல்ல, அவருக்கு 4 மாளிகைகள், இரு கப்பல்கள், ஒரு விமானக் கூட்டம் முதலியவை சொந்தம். இத்தாலி, ஸ்விட்ஸர்லாந்து, அமெரிக்கா ஆகிய நாடுகளில் கோடிக்கணக்கான பணம் தொழில்களில் முதலீடு செய்துள்ளார். இத்தகைய ஒரு மன்னன் நாட்டு மக்களின் கஷ்ட நஷ்டங்களை உணர்வது சாத்தியமன்று. எகிப்தில் 270 லட்சம் மக்களில் 81 சதவிகிதம் கல்வி அறிவில்லாதவர்கள். அவர்களுக்கு கல்வி புகட்டவோ, பொதுச் சுகாதாரத்தை வளர்க்கவோ, நிலப்பிரச்னையைத் தீர்க்கவோ, சமுதாய சீர்திருத்தங்களைச் செய்யவோ மன்னர் ஆட்சி எதுவும் செய்யவில்லை. எனவே மக்களின் அதிருப்தி பொங்கியது. அதன் விளைவுதான் ராணுவப் புரட்சியும், மன்னனின் மணிமகுடம் தரையில் உருண்டதும்.

இரண்டாவது உலக யுத்தத்தில் எகிப்தும் சிக்கிக் கொள்ளாமல் பாதுகாத்தது பாரூக் மன்னர்தான். அதனால் உலக அரங்கில் அவருக்கு தனிப்பெருமை கிடைத்தது. யுத்தகாலத்தில் அவர் பிரிட்டிஷாரை ஆதரிக்கவில்லையென்பது குறிப்பிடத்தக்கது. வாப்து கட்சியும் அதன் தலைவர் நகாஸ் பாஷாவும் யுத்த காலத்தில் பிரிட்டிஷாரை ஆதரித்தனர். ஆனால் இப்பொழுது எதிர்க்கின்றனர்.

### குழந்தை ராஜா

ராணுவப் புரட்சிக்குப் பின்னால் திரட்டப்பட்டுள்ள மக்கள் சக்தியின் முன்னால் மன்னர் பணிந்துவிட்டாரென்றுதான் கூற வேண்டும். ராணுவம் அரண்மனையை முற்றுகையிட்டு பட்டத்தைத் துறக்கும்படி அவரை நிர்ப்பந்தித்தது. அவர் வேறு வழியின்றி அதற்குப் பணிந்ததுடன் ராணுவ உத்தரவுப்படி அன்று (சனிக்கிழமை) மாலை 6 மணிக்கு முன்பே நாட்டைவிட்டும் வெளியேறிவிட்டார். இல்லையேல் அவர் கைது செய்யப்பட்டிருப்பார். அவரது 7 மாதப் புதல்வர் (நரிமனின் குழந்தை) "அஹ்மத் புவாத்" மன்னராகப் பிரகடனப் படுத்தப்பட்டிருக்கிறார். அக்குழந்தையும் சனிக்கிழமையன்று தாய் தந்தையருடன் அலெக்ஸன்ட்ரீயாவிலிருந்து கப்பல் ஏறிவிட்டது. ஏழு வயதான பின்னர் தான் ராஜ்ய பாரத்தை ஏற்றுக் கொள்ள எகிப்துக்குத் திரும்புவாராம். அதுவரை திரு குர் ஆன் விதிகளுக்கேற்ப தாயாரிடம் வளர்ந்துவருவாராம். அவர் சிம்மாசனம் ஏறும்வரை 3 பேர் கொண்ட "ரீஜன்ஸி கவுன்ஸில்" ஒன்று நாட்டை ஆட்சிபுரியும். பட்டம் துறந்த இந்த பணக்கார ராஜ குடும்பம் இப்பொழுது ஸ்விட்ஜர்லாந்து வழியாக அமெரிக்காவுக்குப் பிரயாணம் செய்து கொண்டிருக்கிறது.

பாரூக் மாஜி மன்னரின் வயது 32. அவர் 1938ல் ராணி பரீதாவை மணந்து கொண்டார். அவளுக்கு 3 பெண் குழந்தைகள் உண்டு. அவளை 1948ல் விவாக ரத்துசெய்து, பின்னர் நகைக் கடையில் சந்தித்த அழகி நரிமனை மணந்

(11-ம் பக்கம் பார்க்க)

---

# ஆஸ்பத்திரியில் குழந்தைகளை மாற்றிய அதிசயம்

## ஏழுவருடங்களுக்குப் பிறகு இரட்டையர் கண்டுபிடிக்கப்பட்டனர்

ஆஸ்பத்திரிகளில் குழந்தைகளை மாற்றுவது சாதாரண சம்பவமாகிவிட்டது. சமீபத்தில் கண்டியிலும் இம்மாதிரி சம்பவமொன்று நடைபெற்றது. கண்டி ஆஸ்பத்திரியில் தலைமைக்காரர் ஒருவரின் குழந்தை மற்றொரு குழந்தைக்கு மாற்றப்பட்டது. பம்பாயிலும் இத்தகைய சம்பவமொன்று நடைபெற்றது. ஆனால் 11 வருடங்களுக்கு முன்பு ஸ்விட்ஸர்லாந்தில் நடைபெற்ற ஒரு குழந்தை மாற்று நாடகம் எல்லாவற்றையும்விட ருசிகரமானதாகும்.

ஸ்விட்ஸர்லாந்தில் ஒரு ஆஸ்பத்திரியில் திருமதி ஜோய் என்பவள் பெற்ற இரட்டைக் குழந்தைகளை "நர்ஸ்" மற்றொரு குழந்தையுடன் கலந்துவிட்டதால் தவறுதலாக குழந்தைகள் மாற்றப்பட்டுவிட்டன. ஆகவே திருமதி ஜோய் தனது இரட்டைகளில் ஒன்றையும் மற்றொருவரின் குழந்தையையும் வீட்டுக்கு எடுத்துச் சென்று இரண்டும் தனது சொந்தக் குழந்தைகள் எனவெண்ணி அன்புடன் வளர்த்துவந்தாள். ஆனால் பின்னர் டாக்டர்கள் தவறைக் கண்டுபிடித்து திருத்தி விட்டார்கள். கவலை தோய்ந்த உள்ளத்துடன் இரு தாய்மார்களும் தாங்கள் வளர்த்த குழந்தைகளை மாற்றிக் கொண்டார்கள்.

திருமதி ஜோய் வளர்த்த இரு குழந்தைகளில் பிலிப் தான் அவளது சொந்தக் குழந்தை. போல் மாற்றப்பட்ட குழந்தை. பொன்னிற சுருள் முடியுடன் தந்தையை உரித்துவைத்ததைப் போலிருந்தான் பிலிப். ஆனால் தொட்டால் ஒட்டிக் கொள்ளக்கூடிய கறுப்பு நிற முடியுள்ள போல் குடும்பத்தில் யாரைப்போலவுமில்லை.

திருமதி ஜோய் இவ்விரு குழந்தைகளையும் ஏழு வருடங்கள் வளர்த்தாள். அவள் என்றும் சந்தேகித்ததில்லை. தனது குழந்தையொன்று அடுத்த தெருவில் திருமதி வோட்டர் என்றவளிடம் பெண்ணிடம் வளர்ந்து வருகிறதென்பதும் அவளுக்குத் தெரியாது. "எர்னஸ்ட்" என்பதுதான் அந்தக் குழந்தையின் பெயர்.

### விதியின் விளையாட்டு

இக் குழந்தைகள் பள்ளிக்கூடத்திற்குச் சென்றபோதுதான விதி விளையாடத் தொடங்கியது. போலும், பிலிப்பும் பள்ளியில் சேர்ந்தன்றுதான், எர்னஸ்ட்டும் வந்து சேர்ந்தான். தனது வகுப்பில் இரட்டைக் குழந்தைகள் இருவர் உண்டென்பதைத் தெரிந்துகொண்ட ஆசிரியை பிலிப்பும் எர்னஸ்ட்டும் ஒரே மாதிரி இருப்பதைக்கண்டு அவர்கள் இரட்டைகள் என்றெண்ணி, அவர்களிருவரையும் ஒன்றாக உட்கார வைத்தாள். இதைப் பார்த்து வகுப்பிலுள்ள ஏனைய மாணவர்கள் சிரித்ததால், ஆசிரியை தவறை உணர்ந்துகொண்டார்.

பிலிப் உடல் நலமின்றி பள்ளிக்கூடத்திற்குப் போகாதிருந்த தினங்களிலும், "பிலிப் பள்ளியிலிருந்து வருவதை நாங்கள் கண்டோம்" என்று சிலர் கூறுவது திருமதி ஜோய்க்கு ஆச்சரியமாயிருந்தது. மூன்று குழந்தைகளும் வெள்ளை நிற ஆடை அணிந்து தேவாலயத்திற்கு ஒன்றாகச் செல்லும்போதுதான் அவர்களைப் பார்த்தவர்களின் மூளை கலங்கியது.

சில சமயங்களில் திருமதி ஜோய்யே எர்னஸ்ட்டைப் பார்த்து பிலிப் பென்று ஏமாந்துபோவார். ஜோய் தம்பதிகளுக்கும் எர்னஸ்ட்டும் பிலிப்புதான் இரட்டைகளாக இருக்க முடியுமென்ற சந்தேகம் ஏற்பட்டது. எர்னஸ்ட் தங்களின் மற்றொரு குழந்தையாயிருக்கலாமென்ற சந்தேகம் வலுத்துவிட்டதால் இரத்தப் பரிசோதனை செய்ய வேண்டுமென்றார்கள். எர்னஸ்டின் உண்மையான தாயார் திருமதி வோட்டர் அல்ல என்பது அவர்களின் எண்ணம்.

### இரத்த சாட்சி

இவ் விஷயத்தில் நிபுணர்களெல்லாம் மண்டையை உருட்டிக் கொண்டிருக்கும்போது, எர்னஸ்ட்டும், பிலிப்பும் இணைபிரியா நண்பர்களாகிவிட்டதையும் போல் ஒதுங்கியிருப்பதையும் ஆசிரியர்கள் கண்டார்கள். பிறப்பு "சர்டிபிகேட்"டை விட இரத்த சாட்சியை நம்பலாமல்லவா?

புதிய பரிசோதனைகள் நடத்தி இரட்டையர்களைக் கண்டுபிடிக்க ஜினீவாவிலிருந்து விஞ்ஞானிகள் அழைக்கப்பட்டனர். இரத்த பரிசோதனையில் எர்னஸ்டும் பிலிப்பும் சகோதரர்களென்பது தெரிந்தது. அவர்களின் பற்களும் ஒரே மாதிரியிருந்தன. கீழ் வரிசையில் முன் வாய்ப் பற்கள் இருவருக்கும் இரண்டு தான் இருந்தன. போலுக்கு நான்கு பற்கள் இருந்தன. அவர்களுடைய கை ரேகைகளும் ஒரே ரகத்தைச் சேர்ந்தவைகளாயிருந்தன. இருவருக்கும் வலது கையில் ஒரு சிறிய எலும்பு இல்லாதிருந்தது. கண்களும் காதுகளும் ஒரே அச்சில் வார்க்கப்பட்ட

(10-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனக்குரல்

### கள்ளத் தோணிக்காரர்களென நாட்டு மக்கள் கைது

ஐயா,

எங்கள் மன்னார் பகுதிகளில் இந்தியாவில் இருந்து கள்ளத் தோணியில் வருகிறவர்களைப் பிடிப்பதற்காக இலங்கை விசேஷ போலீஸ் படைகளும் இலங்கை இராணுவ வீரர்களும் மும்முரமாக ஈடுபட்டு இருக்கிறார்கள் இவர்கள் சட்டவிரோதமாகப் பிரவேசிப்பவர்களைப் பிடிப்பதாகச் சொல்லிக்கொண்டு ஊரவர்களுக்குச் செய்கிற கொடுமைகளுக்கும் அநியாயத்துக்கும் ஒரு எல்லையே இல்லை ஊரவர்களாகிய நாங்களே வெளியில் தலை காட்டமுடியாமல் இருக்கிறோம். எங்கள் சொந்தப் பிழைப்புகளைச் செய்யமுடியாமலும் பெண்கள் குழந்தை குட்டிகள் ரோட்டில் நடமாட முடியாமலும் இருக்கிறது பரம்பரை பரம்பரையாக இந்த ஊரிலேயே பிறந்து வரும் தமிழர்களாகிய எங்களை ஒரு விதக் கேள்வியோ நியாயமோ இல்லாமல் உடனே கைதியாக்குகிறார்கள். வயலில் வேலை செய்து கொண்டு இருந்தாலும் சரி கடற்கரையில் மீன் பிடித்துக் கொண்டு இருந்தாலும் சரி உடனே கள்ளத் தோணி என்று சொல்லிக்கொண்டு லொறியில் ஏறச் சொல்லி சித்திரவதை செய்கிறார்கள் வாயைத் திறந்து ஒன்றும் சொல்லமுடியாது. ஏதும் தங்களைப் பற்றி சொல்ல வாய் எடுத்தால் அடக்குமுறையும் தடியடிப் பிரயோகமும் தான் கண்ட பயன். நீங்கள் யார், எங்கிருக்கிறீர்கள், பெயர் என்ன, என்பதுபோன்ற கேள்விகள் ஒன்றும் இல்லாமல் கைதியாக்குகிறார்கள் நிரபராதிகளான எங்களை ஏன் இந்த அவமானத்துக்கும் கஷ்டத்துக்கும் ஆளாக்குகிறார்களோ தெரியவில்லை. இதை கேட்பார் இல்லையா? இதுதானா சட்டம்? இதுதானா நேர்மை? இதுதான் ஒத்துழைப்பா? சட்டவிரோதமாக பிரவேசிப்பவர்களைப் பிடிக்க வேறு வழிவகைகள் நியாயமான முறையில் கிடையாதா? இவைகளையெல்லாம் பார்த்துக்கொண்டு அரசாங்கமும் கண்ணை மூடிக்கொண்டுதான் இருக்கிறதா? இந்த அக்கிரமத்துக்கு முடிவே கிடையாதா? நேர்மையை அரசாங்கம் நிலைநாட்டாதா? இனிமேலாவது இந்தக் கொடுமைகள் நடக்காமலும் ஊரவர்களின் நன்மையை உத்தேசித்தும் அரசாட்சியார் ஆவன செய்வார்களென நம்புகிறோம்.

இப்படிக்கு
பொதுஜன ஊழியன்

ஊற்றுவாயன் குளம்
முருங்கன்.

சுதந்திரன்
SUTANTIRAN

194ஏ, தட்டாதெரு போன்: 3411

1952 ஆகஸ்ட் மீ 3 உ

# தமிழா? சிங்களமா? இரண்டுமா?

வரவு செலவுத் திட்டப் பிரசங்கத்தின்போது நமது மதிப்பிற்குரிய நிதி மந்திரியார் அரசாங்கத்தின் தேசிய பாஷைக் கொள்கையைப் பற்றி மாமூல் பிரகாரம் தமது பழைய பல்லவியை நீட்டி முழக்கிப் பாடி வைத்தார்

அதாவது சிங்களமும் தமிழும் இந் நாட்டின் உத்தியோக பாஷைகளாகும் என்று அவர் கூறினார்.

இந்த நாட்டில் சிங்களமும் தமிழும் ஏக காலத்தில் எல்லா இடங்களிலும் அரசாங்க பாஷையாக இருக்கும் என்பது அர்த்தமற்ற, சாத்தியமற்ற, ஏமாற்றுப் பசப்பு மொழி என்பதைத் தமிழ் மக்கள் நன்கு உணரவேண்டும்.

சிங்களத்தையும் தமிழையுமே அரசாங்க பாஷையாக்கப்போகிறோம் என்று அரசாங்கம் கூறுவதும் "ஆஹா, அற்புதம் அற்புதம்; எவ்வளவு தாராளம், எவ்வளவு பரந்த மனப்பான்மை இந்த அரசாங்கத்தினருக்கு" என்று ஒத்துழைப்புத் தலைவர்கள் சொக்கையை விரித்துக்கொண்டு ஒத்து ஊதுவதும் தமிழ் மக்கள் கண்ணில் மண்ணை தூவும் சதிச் செயல்களாகும்

சிங்களத்தையும் தமிழையும் அரசகரும மொழிகளாக்குகிறோம் என்று தேன் சொட்டப் பேசும் பேச்சு வெளிப் பார்வைக்கு நியாயமானதும் நீதி நிறைந்ததும்போல் சில ஏமாந்த சோணகிரிகளுக்குத் தோன்றலாம். ஆனால் ஆழ்ந்து கவனித்தால் காலவரையில் நம் அருந்தமிழ் மொழிக்கு இந் நாட்டில் சமாதி கட்டிவிட இக் கொள்கைதான் அஸ்திவாரமாக அமையப்போகிறதென்பது புலனாகும்.

இரண்டு பாஷைகளும் அரசாங்க பாஷையானால் எல்லா அரசாங்க ஊழியர்களும் தங்கள் கடமையைச் செய்வதற்கு இரண்டு பாஷைகளையும் அறிந்திருக்கவேண்டும். அப்படி இருந்தாலும் செவ்வனே கடமையாற்றிவிட முடியாது ஒரு இலாகாவின் உள்ளே நடைபெறும் கட்டளைகளையும் குறிப்புகளையும் எந்தப் பாஷையில் நடத்துவதென்பது பிரச்னையாகிவிடும். மேலதிகாரி சிங்களத்தில் குறிப்பு எழுதினால் சம்பந்தப்பட்ட லிகிதர் தமிழில் பதில் குறிப்பு எழுதலாமா? ஒரே கடதாசியில் இப்படிக் குறிப்புகள் இரு பாஷைகளிலுமிருந்தால் வேடிக்கையாகத்தான் இருக்கும்.

இது போக, இலாகாவிற்கு இலாகா எழுதும் கடிதங்கள் எந்தப் பாஷையில் எழுதப்படுவது? ஒரு இலாகா சிங்களத்தில் கடிதம் எழுதினால் மற்ற இலாகா தமிழில் பதில் எழுதலாமா?

இந்த நெருக்கடி காரணமாக முடிவில் ஒரு பாஷைதான் உபயோகத்திற்கு வரும். அந்தப் பாஷை சிங்களப் பாஷையாகவே இருக்கும். ஈற்றில் தமிழ் மொழி நாளிலும் பொழுதிலும் நலிவுற்று இலங்கை அரசாங்கக் கல்லறையில் நீட்டி நிமிர்ந்து படுத்து மடிய வேண்டியதுதான்.

இந்த நாட்டில் உண்மையில் சிங்களமும் தமிழும் சிரஞ்சீவி மொழிகளாய் அரசோச்ச வேண்டுமானால் அதற்கு ஒரே மார்க்கந்தானுண்டு. அதாவது இந்த இரு மொழிகளும் பிரதேசவாரியாய் அரசகரும மொழிகளாய் விளங்குவதுதான் அந்த ஒரே மார்க்கம்.

பாஷாவாரி மாகாணங்களாக இந்நாடு பிரிக்கப்பட்டு தமிழ் மாகாணங்களில் தமிழும் சிங்கள மாகாணங்களில் சிங்களமும் ஆட்சி மொழியாக வேண்டும் இதை மேலும் விளக்கினால் இந்நாட்டில் பாஷையை அடிப்படையாகக்கொண்ட ஆனவாரிப் பிரிவினையின்பேரில் ஒரு சமஷ்டி அரசாங்கம் ஏற்பட்டாலொழிய இந்நாட்டின் தேசிய பாஷைப் பிரச்னைக்கு, அரசகரும மொழிப் பிரச்னைக்கு, விமோசனமே கிடையாது

ஃ ஃ ஃ

இந்நாட்டில் நம் உயிர்மொழியான தமிழ் மொழியின் எதிர்காலம் இவ்வளவு பயங்கரமான நிலைமையில் இருக்கும்போது சிலர்—அதுவும் தங்களைத் தமிழ் ஆசிரியர்கள் என்று சொல்லிக்கொள்பவர்கள்—இலங்கையில் உள்ள தமிழ் பாடசாலைகளில் சிங்களமும் சிங்களப் பாடசாலைகளில் தமிழும் படிப்பிக்க வேண்டும் என்று அபிப்பிராயப்படுகிறார்கள். அது மாத்திரமல்ல நிலைமையை உணராமல் ஆசிரியர் சங்கம் கூடி தீர்மானங்கள் வேறு நிறைவேற்றுகிறார்கள்.

இட்டடி வீட்டிகத் தீர்மானங்கள் நிறைவேற்றும் விபீஷணர்கள் தமிழ் இரத்தம் ஓடும் வீர தமிழர்களாய் இருக்க முடியாது. சிங்கள இரத்தம் ஓடும் குணசிங்கிகளாகவும் வணசிங்கிகளாகவுமே இருப்பார்கள்

இந்த வகையில் மேல்மாகாணத் தமிழ் ஆசிரியர் சங்க நிர்வாக சபையினர் "தமிழ் பாடசாலைகளில் சிங்களம் வேண்டாம்" என்று செய்திருக்கும் முடிவை நாம் பெரிதும் பாராட்டுகிறோம். இந் நிகழ்ச்சி இன்றைய வெளியீட்டின் பிறிதோர் பக்கத்தில் பிரசுரமாகிறது அதிலே வித்துவான் வேதநாயகம் அவர்கள் ஆற்றியிருக்கும் அரிய சொற்பெருக்கு இதர தமிழ் ஆசிரியர்களுக்கும் தமிழ் ஆசிரியர் சங்கங்களுக்கும் விளக்கமளித்து வழிகாட்டுமாக

## ஆன்

புதிய சினிமாப் படங்கள் இந்தியாவில் திரையிடப்பட்டு மாதங்கள் மட்டுமல்ல வருடங்கள் சில சென்ற பின்பும் இலங்கையில் வெளியிடப்படாத காலம் ஒன்றிருந்தது. எப்போது வரும் புதுப் படம் என்று சினிமா ரஸிகர்கள் ஏங்கித் தவங்கிடந்த காலம் அது.

புதிய படத்தை அதுவும் புதுமையாக ரெக்னிக்கலர் வர்ணத்தில் பிடிக்கப்பட்ட ஒரு உயர்தர உன்னதப் படத்தை இந்தியாவில் வெளியாகு முன்பே இலங்கையில் வெளியிட்டு ஒரு "ரெக்கோட்"டை ஏற்படுத்தியிருக்கிறார்கள் ஸிலோன் தியேட்டர்ஸார்:

ஆன் என்ற கண்ணைக் கவரும் வர்ண சித்திரப் படம் இம்மாதம் 7ந் தேதிதான் இந்தியாவில் முதன் முதலாக வெளியிடப்படவிருக்கிறது ஆனால் இப்படத்தை இம்மாதம் முதல்தேதி தொடக்கமே இலங்கை ரஸிகர்கள் ஏககாலத்தில் ஆறு தியேட்டர்களில் கண்டானந்திக்கும்படி செய்துவிட்டார்கள் ஸிலோன் தியேட்டர்ஸார்

இவர்களின் இந்த முயற்சியை ரஸிகர்கள் பாராட்டாமல் விடுவார்களா?

## யாழ்ப்பாணத் தேர்தல் மனுக்கள்

### மேலும் சில குற்றச்சாட்டுகள்

பாராளுமன்றப் பிரதிநிதிகளாக யாழ்ப்பாணம், சாவகச்சேரி, காங்கேசன்துறை ஆகிய தொகுதிகளுக்கு முறையே திருவாளர்கள் ஜி. ஜி பொன்னம்பலம், வி. குமாரசாமி, எஸ். நடேசன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளதை ஆட்சேபித்து தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுக்களைத் திருத்தி அமைப்பதற்கு அனுமதி கோரி விண்ணப்பங்கள் சுப்ரீம் கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

திரு வி பார்குமாரகுலசிங்கா இந்த விண்ணப்பங்களைத் தாக்கல் செய்திருக்கிறார்

சம்பந்தப்பட்டவர்களின் தேர்தல் செலவுகளில் தவறுதல்களும் ஒழுங்கீனங்களும் காணப்படுவதால் இதையொட்டி மேலும் சில குற்றச்சாட்டுகளைச் சேர்ப்பதற்கு இந்த மனுக்களில் அனுமதி கோரப்படுகிறது.

இவ் விஷயம் ஆகஸ்ட் 6 ந் தேதியான அடுத்த புதன்கிழமை சுப்ரீம் கோர்ட்டில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்

## உணவு கட்டுப்பாடு

### அரிசி சமைக்கும் முறை

சமீபத்தில் இறக்குமதி செய்யப்பட்ட அமெரிக்க பச்சரிசியில் பசை சற்று கூடுதலாயிருப்பதாகக் காணப்படுவதால் அதைச் சமைப்பதில் வேறு வழிகளைக் கையாளுவது நல்லது கீழ்க்கண்ட சில முறைகளைக் கையாளலாம்.

ஏ. (1) அரிசியை முதலில் ஒரு மட்பாண்டத்தில் போட்டு சுமார் 5 நிமிஷம் வரை வறுக்க வேண்டும். இலேசான பழுப்பு நிறம் வந்தவுடன் வறுப்பதை நிறுத்திக் கொள்ள வேண்டும்.

(2) வறுத்த அரிசியை கொதி நீரில் போட வேண்டும். நன்கு கொதித்தபின் தண்ணீரை வடிகட்டி இளம் சூட்டில் மேற்கொண்டு சற்று நேரம் வைத்திருக்கவேண்டும் தண்ணீரை வடிகட்டு முன் அரிசி தேவைக்கதிகமாக கொதித்துவிடாதபடி பார்த்துக் கொள்ளவேண்டும்

(பி) அரிசியை தண்ணீரில் சில தடவைகள் கழுவி இடியாப்ப மாவை ஆவியில் வைப்பது போல், 15 நிமிஷம் ஆவியில் வைக்கவேண்டும். பின்னர் கீழே இறக்கிவைத்து சிறிது நேரத்திற்கெல்லாம் வழக்கப்படி சமையல் செய்து கொள்ளலாம். சரியாக கொதிக்கும் தருணத்தில் கஞ்சியை வடிகட்டுவது மிகவும் நல்லது.

(மேலே (ஏ) பிரிவில் கூறப்பட்ட முறை, அரிசி சற்று கறுப்பாயிருந்தாலும் நல்ல பலனைக் கொடுக்கும்).

இந்த அரிசியை தேர்ச்சி பெற்ற ரசாயன நிபுணர் பரிசோதனை செய்து பொது மக்களுக்கு வழங்குவதற்குத் தகுதியுள்ளதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது தற்பொழுது இவ்வரிசி வழங்கப்படுகிறதெனினும், புழுங்கலரிசி வந்து சேர்ந்தவுடன் அது (புழுங்கலரிசி) வழங்கப்படும்.

எம். எப். டி. காஸ்பெர்ஸ்,
உணவு கமிஷனர் (கட்டுப்பாடும் விநியோகமும்.)
கொழும்பு 7.
21, ஜூலை, 1952.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுயாட்சித் தமிழகம் பெறும்வரை எங்கள் போர் ஓயாது'

## அச்சுவேலியில் தமிழரசுக்கட்சித் தலைவர் செல்வநாயகம்

'அரசியலில் நாம் (தமிழர்கள்) உணர்ச்சியற்று உறங்கும் நிலைக்கு வந்துவிட்டோம் உரிமை மறுத்தவர்களை—உரிமை பறித்தவர்களை நெஞ்சுரத்துடனும், நேர்மைத் திறத்துடனும் எதிர்க்கும் மன வலிமையையும், ஊக்கத்தையும் கூட இழந்துவிட்டோம். இது வெட்கப்படவேண்டிய விஷயமட்டுமல்ல வேதனை அடையக்கூடிய விஷயமுமாகும்' என்று தமிழரசுக் கட்சித் தலைவர் திரு எஸ் ஜே. வி செல்வநாயகம் அச்சுவேலியில் நடைபெற்ற பகிரங்கக் கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

மேலும் அவர் பேசியதாவது:—

சென்ற தேர்தல் காலம் நம் கட்சிக்கு ஒரு சோதனை காலமேயாகும் அந்தத் தேர்தலில் மக்கள் ஆதரவைத் தெரிந்து கொள்ள நாம் போட்டியிட்டோம். இலங்கைத் தமிழ் பேசும் மக்களின் ஜீவாதாரமான அந்தப் போரில் நாம் அத்தனை பேரும் தோற்றிருந்தாலும் கூட நமது குறிப்பிட்ட இலக்கை அடைவதில் நாம் அயர்ந்துவிடப் போவதில்லை நாம் ஓரும் சுயாட்சித் தமிழகம் கிடைக்கும்வரை நமது போராட்டம் ஓயப்போவதுமில்லை.

கோப்பாய் பிரதிநிதி திரு வி. வன்னியசிங்கத்துக்கு இவ்வூர் வாசிகளால் வரவேற்பளிக்கும் முகமாக இக் கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டது.

கூட்டத்திற்கு திரு எஸ் வீரசிங்கம் தலைமை வகித்தார். திரு. வி வன்னியசிங்கம் தமக்களிக்கப்பட்ட வரவேற்பிற்கு நன்றி தெரிவித்தார் கூட்டத்தில் வழக்கறிஞர் திரு ஏ. அமிர்தலிங்கமும் வேறு பலரும் பேசினர்.

# "கோர்ட்டில் கடவுள் மீது பிரமாணம் எடுக்கவேண்டியதில்லை"

## அப்பீல் விசாரணையில் நீதிபதிதீர்ப்பு

கோவை, ஜூலை—

சாட்சியம் கூறுகையில் கடவுள்மீது ஆணையிட சாட்சி மறுத்ததால் அவர் கோர்ட்டை அவமதித்ததாக கருதி கீழ்க் கோர்ட் நீதிபதி, திராவிட முன்னேற்றக் கழக பிரமுகர் ஒருவருக்கு தண்டனை விதித்தார். அதை எதிர்த்து செய்து கொள்ளப்பட்ட அப்பீல் மேல் கோர்ட் நீதிபதி "கோர்ட்டுகளில் கடவுள்மீது ஆணையிட்டு பிரமாணம் செய்ய மாறுவற்புறுத்தக்கூடாது" என்று தீர்ப்பளித்தார்.

கோர்ட்டை அவமதித்ததாக வந்த வழக்கில் கோவை ஜில்லா திராவிட முன்னேற்ற கழகச் செயலாளர் சே. அ. ராஜமாணிக்கத்திற்கு கோவை நகர சப் மாஜிஸ்திரேட் விதித்திருந்த தண்டனையை கோவை ஜில்லா மாஜிஸ்திரேட் ரத்து செய்துவிட்டார்.

கோவையில் சில மாதங்களுக்கு முன்னால் ஒரு மத சடங்கையொட்டி ஏற்பட்ட கலவரத்தின்போது சிலர் திராவிடமுன்னேற்றக் கழக காரியாலயத்தின மீது படையெடுத்து சிலரை தாக்கி கழகக் கொடியை பிடுங்கி எரித்ததாகவும் கொடி மரத்தை வெட்டி எடுத்துச் சென்றுவிட்டதாகவும் கூறப்பட்டது. அது சம்பந்தமாக நகர சப் மாஜிஸ்திரேட் முன்பு தொடரப்பட்டிருந்த வழககில் சே. அ ராஜமாணிககம் பிராசிகயூஷன் தரப்பு சாட்சிகளில ஒருவராக விசாரிக்கடபட்டார்.

சாட்சி பிரமாணம் எடுத்துக்கொள்ளும்போது, கோர்ட்டார் "சத்தியமாகச் சொல்லுகிறேன" என்று கூறும்படி கேட்டதற்கு ராஜமாணிக்கம் "உண்மையாகக் கூறுகிறேன்" என்ருர்.

மீண்டும் கோர்ட்டார் "சர்வ வல்லமையுள்ள கடவுள் ஆணையாகக் கூறுகிறேன்" என்று சொல்லும்படி சொன்னதற்கு ராஜமாணிக்கம் "சர்வ வல்லமையுள்ள நீதியின் பெயரால் கூறுகிறேன்" என்று சொன்னுர்.

இது கோர்ட்டை அவமதிப்பதாகும் என்று கருதி ராஜமாணிக்கத்திற்கு 50 ரூபாய் அபராதம் அல்லது 6 வார வெறுங்காவல் தண்டனை விதித்தார்

சப் மாஜிஸ்திரேட்டின் தீர்ப்பை ஆட்சேபித்து சே. அ. ராஜமாணிககம் ஜில்லா மாஜிஸ்திரேட் கோர்ட்டில் அப்பீல் செய்து கொண்டார்.

தனக்குத் தெரிந்தவரைக்கும் உண்மையை கூறுவதாகவும் தான் கூறுவது உண்மையைத் தவிர வேறல்ல என்றும் உறுதி கூறுவதுதான் பிரமாணம் எடுப்பதன் நோக்கம் என்றும் அவர்கள் உண்மையாக கூறுவதாக உறுதி கூறினால் போதும் என்றும், கடவுள் மீதும் மதத்தின் மீதும் நம்பிக்கையில்லாதவர்களிடம் வற்புறுத்தி அவ்வாறு கூறச் செயவது கூடாது என்றும் நம்பிக்கையில்லாதவாகள் கடவுளின்மீது பிரமாணம் எடுக்க மறுப்பது குற்றமாகாதென்றும் ராஜமாணிக்கம் சார்பில எடுததுக் கூறப்பட்டது.

### தீர்ப்பு

முடிவில் ஜில்லா மாஜிஸ்திரேட் கீழ்க கோர்ட்டில் ராஜமாணிககம் கடந்து கொண்டது கோர்ட்டை அவமதிப்பதாகாது என்று கருதி அவருக்கு கீழ்க் கோர்ட் விதித்திருந்த தண்டனையை ரத்து செய்து தீர்ப்பளித்தார்.

# நிலத்தேவையைப்..........

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

பிராந்தியங்களில் அபிவிருத்தி அடைந்துள்ள நிலங்களை ஸ்வீகரிப்பதின் மூலமும் நிலத்தேவை தீர்க்கபட்டது என்று நிதி மந்திரி கூறினர். இதன் அர்த்தமென்ன? நிலமில்லாதோர் அனைவருக்கும் போதுமான நிலம் கொடுக்கப்பட்டிருக்கிறதென்பதுதான் இதன் கருத்தா? அப்படியானுல் அவரது பேச்சு மறுக்கப்பட வேண்டியதாகும் ஏனெனில் நிலமில்லாதவர்களும், வீடில்லாதவர்களும் ஆயிரமாயிரம் பேர்கள் உண்டு. நிலமில்லாப் பிரச்னை தீர்ப்பதற்காக அரசாங்கம் உருப்படியான முயற்சி எதுவும் செய்யவில்லை. இத்துறையில் அரசாங்க நடவடிக்கைகள் நுனிப்புல் மேய்வதாகும். இந்நாட்டில் நிலமில்லாதிருப்பதைப்பற்றி அரசாங்கம் புள்ளி விவரம் சேகரித்திருக்கிறதா? யாழ்ப்பாண தீபகற்பத்தில் நிலமில்லாதிருப்பதை ஒழுங்காக கணக்கெடுக்குமாறு கோரி 1948ல் பிரதம மந்திரிக்கு நான் ஒரு மனு சமர்ப்பித்தேன். மேல் மாகாணத்திற்கு அடுத்தபடி அதிக ஜன நெருக்கடியுள்ள பிரதேசம் யாழ்ப்பாணம் தீபகற்பம்தான். ஆனுல் பிங்கிரியப் பிரதிநிதி (திரு டி பி சுபசிங்க) கூறுவதைப் போல தற்காலீக உணவு மந்திரி பிரதிநிதியாகவிருக்கும் பூநகரியில் மட்டும் அவ்வாறில்லை.

**திரு குமாரஸ்வாமி:—** பூநகரி இருப்பது யாழ்ப்பாண தீபகற்பத்திலல்ல.

**திரு வன்னியசிங்கம்:—** ஆனுல் அது யாழ்ப்பாண ஜில்லாவிலிருக்கிறது

**திரு குமாரஸ்வாமி:—** தீபகற்பம் வேறு—ஜில்லா வேறு

**திரு வன்னியசிங்கம்:—** அது எனக்குத் தெரியாத விஷயமல்ல இந்தப்பிரச்னையைக் குறித்து இச்சபையில் நான் பன்முறை பேசியிருக்கிறேன். நிலமில்லாததைப்பற்றி புள்ளி விவரம் சேகரிக்கும்படி நான் கேட்டபோதெல்லாம், அது செய்யப்படுமென்று பதிலளிக்கப்பட்டது. ஆனுல் நடைபெறவில்லை. இவ்வருடமாவது அது நடைபெறுமென்று கருதுகிறேன். ஒழுங்கு முறைப்படி நிலம் வினியோகம் செய்வதற்கு இது அவசியமாகும்.

### விளம்பரம் போதாது

விவசாயத் திட்டங்களைப் பொறுத்தவரையில் விவசாயிகள் சென்று குடியேறுவதற்கு நிலங்கள் இருக்கின்றனவென்று அரசாங்கம் சரிவர விளம்பரப்படுத்துவதில்லை. கச்சேரி விளம்பரப் பலகையுடன் அந்த விளம்பரங்கள் நின்றுவிடுகின்றன. கெஸட்டிலேயோ, பத்திரிகைகளிலோ அத்தகைய விளம்பரங்களைக் காண்பது அபூர்வமாகிவிட்டது. எப்படியோ தப்பு கண்டுபிடித்து பனுச்செய்தவர்களிலிருந்து சிலரை அரசாங்க உதவி ஏஜண்டுகள் தேர்ந்தெடுக்கின்றனர்

(தொடரும்)

## அரசாங்க அறிக்கை

### கிருஷிக இலாகா

பரந்தன் அரசினர் கமத்திலுள்ள 20 ஏக்கர் நிலத்தில் உற்பத்தி செய்த சணல் தடிகள் விற்பனை செய்வதற்கு விண்ணப்பப் பத்திரங்கள் 5-8-52 வரைக்கும் வட பகுதிக் கிருஷிகத் தலைவர், யாழ்ப்பாணம் அவர்களால் ஏற்றுக் கொள்ளப்படும். விண்ணப்பம் செய்வோர் 30 இருத்தல் நிறையுள்ள சணல் தடிக் கட்டொன்றை வாங்கும் விலையை அறிவித்தல் வேண்டும். வட பகுதிக் கிருஷிகத் தலைவரிடமிருந்து பெற்றுக் கொள்ளும் 10 மாதிரிப் பத்திரத்தில் தான் விண்ணப்பம் செய்தல் வேண்டும். ஏதும் ஓர் கச்சேரியில் அல்லது திறைசேரியில் ரூபா 10 கட்டி அதன்பற்றுச்சீட்டைக் காண்பிப்போருக்கே மாதிரிப்பத்திரங்கள் கொடுக்கப்படும்.


"பாரததேவி"

(தமிழ்த் தினசரி)

நிர்வாக ஆசிரியர்: எம். பக்தவத்ஸலம் (மாஜி மந்திரி)

திறமையும் செல்வாக்கும்வாய்ந்த புது நிர்வாகம் விமானப் பதிப்பு ஒவ்வொரு நாள் மாலை நாலு மணிக்கே கொழும்பில் கிடைக்கும். வெளியூர்களில் ஏஜண்டுகள் தேவை. விபரங்களுக்கு எழுதுக.

தனிப் பிரதி விலை ச. 10 மாத சந்தா ரூ 3-50

சோல் ஏஜண்டுகள்:-

மோகன்குமார அன்கோ

66, 1/5, 1ம் குறுக்குத்தெரு கொழும்பு.

வேல் தைலம்

இதனுல் குணமாகும் வியாதிகள்:- ஜலதோஷம், மூக்கடைப்பு தலைவலி, தலைப்பாரம், ஒருதலைக்குத்து, பிடரிக்கனம், கைகால் உளைச்சல், முதுகுவலி வயிற்றுவலி, விஷக்கடி, தேள்கடி பூரான்கடி, எலிக்கடி, ஜன்னி 13, வாதம் 80, வாய்வுகுத்து, வாய்வுபிடிப்புகள், விதைவாய்வு, நரம்புவலி, பல்வலி, பல்அரணை, இழுப்பு, கக்குவான், இருமல், காதுகுத்து காதுவலி, சுளுக்கு, வீக்கம், ரத்தக்கட்டு, வெட்டுக்காயம், புண் சொறி, சிரங்கு, கட்டிகள், புரப்பாடுகள் முதலிய சகல வலிகளுக்கும், வியாதிகளுக்கும் அந்தந்த இடங்களில் வேல் தைலத்தை நன்ருய்த் தேய்த்துவர ஆச்சரியமான குணம் கொடுக்கும். இது ஒவ்வொரு வீட்டிலும் இருக்கவேண்டிய மகாசஞ்சீவி. ஒவ்வொரு புட்டியிலும் உபயோக விபரம் வைக்கப்பட்டிருக்கின்றது

புட்டி 1 ரூ. 1-25, டஜன் 1 ரூ. 12-00

வி. பி. பி. தபால் செலவு வேறு.

லக்சால்

இது நாள்பட்ட சொறி, சிரங்கு, முகப்பரு, நமைச்சல், கக்கூஸ்பற்று, படை, தேமல், வண்டுகடி, தண்ணீர்கடி, பித்த வெடிப்பு, ரணங்கள், புண்கள், காயம், வேனல்கட்டி, கரப்பன், தமூவணி, அக்கி, தீச்சுட்டபுண்கள் முதலிய சகல சர்ம வியாதிகளையும் குணமாக்கும். இது தோலிலுள்ள விஷக் கிருமிகளை சிலநிமிஷங்களில் அழித்து பூரணசுகத்தைக்கொடுத்து சர்மத்திற்கு பளபளப்பை உண்டாக்குகிறது. துணிகளில் கறைபிடிக்காது.

புட்டி 1 சதம் 75. டஜன் 1 ரூ. 7-00

வி பி பி. தபால் செலவு வேறு.

கோபால் பல் பொடி

பல்களுக்கு வெண்மைதந்து பிரகாசிக்கச் செய்யும் பல்வலி, பல்அரணை, பல்கூச்சம், ஈறுகளில் இரத்தம்வருதல் முதலியவைகளை நீக்கி பல்களுக்கு தீர்க்காயுள் தரும். வாய்க்கு ருசியும், முகத்துக்கு அழகையும் உண்டாக்குகிறது. 100 பாக்கெட்டுகள் விலை ரூ. 7-50 வி பி. பி. தபால் செலவு வேறு. இம்மருந்துகள் எல்லா இடங்களிலும் விற்கப்படுகிறது. உங்களுக்கு சமீபத்தில் உள்ள கடைகளில் கேட்டு வாங்குங்கள். அல்லது எமது இலங்கை சோல் ஏஜண்டுக்கு எழுதி பெற்றுக்கொள்ளுங்கள்.

தயாரிப்பவர்கள்:

எஸ். பி. எஸ். ஜெயம் அன் கோ.

வேல் கெமிக்கல் ஒர்க்ஸ், 280 கீழமாசிவீதி. மதுரை

இலங்கை சோல் ஏஜண்ட்:

எம். ஏ. ஆர். எஸ. மனுவேல்நாடார் & கோ

34, செட்டியார் தெரு, கொழும்பு-11.

ஹெட் ஆபீஸ்:-

193 காலிரோட், கொள்ளுப்பிட்டி. கொழும்பு-3.

TELEgram / phone JayaJeevi, 6019.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

சிறுகதை:

# ★ மீனாட்சி

டி. எம். முருகையா

மேலே நிர்மலமான நீல வானம். எதிரே தெளிந்த நீர்த் தடாகம். ஸ்படிகம் போன்ற அந்நீரில் துள்ளி விளையாடும் வகைவகையான மீனினங்கள். தடாகத்தைச் சுற்றிலும் வண்ண மலர்ச் சோலை!

கையிலே பூக் கூடையுடன் தடாகக் கரையில் உட்கார்ந்து சிந்தனையிலீடுபட்டிருந்தான் வேலுச்சாமி பண்டாரம். ஒரு சமயம் இதே தடாகக் கரையில் தானும் மீனாட்சியும் ஒருவர் கையை ஒருவர் பிடித்துக் கொண்டு சத்தியம் செய்து கொண்டதும், அந்த அபலைப்பெண் கண்ணீர்விட்டு அழுது பிரலாபித்ததும், இப்போது பலவந்தமாக அவள் இன்னொருவன் மனைவியாக்கப்பட்டதும், அதன் பலனாக தான் மட்டும் தன்னந்தனியனாக தடாகக்கரையில் அமர்ந்திருப்பதும் அவன் நினைவுக்கு வந்தது.

அவனும் மீனாட்சியும் சிறுவயதுமுதல் ஒன்றாக வளர்ந்தவர்கள். அவள் வேறு யாருமில்லை. சாட்சாத் வேலுச்சாமி பண்டாரத்தின் சொந்த மாமன் குருசாமியின் மகள். அவன் இளவயதுமுதல் மாமன் வீட்டிலேயே வளர்ந்தவன்தான். குருசாமிக்கு மீனாட்சியைத்தவிர வேறு குழந்தைகள் கிடையாது. எனவே வேலுச்சாமிக்குத் தன் மகளைக் கல்யாணம் செய்து கொடுத்துவிட விரும்பினான் குருசாமி. ஆனால் வேலுச்சாமியோ மாமனுக்கேற்ற மருமகனாக இல்லை. படுசுட்டியாயிருந்தான்.

மீனாட்சியை அடிக்கடி அழவைப்பதில் அவனுக்குத் தனியான ஆனந்தம். எந்த நேரமும் நறுக்நறுக்கென்று கிள்ளிவிடுவான். கோவென்று கதறுவாள் மீனாட்சி கொஞ்ச நேரத்தில் இருவரும் சமாதானமாகிவிடுவார்கள். பின்பு கைகளைக் கோர்த்துக் கொண்டு வண்ணமலர்ச் சோலைக்குள் குதித்தோடுவார்கள். ஆடிப்பாடி மகிழும் இவ்விளம் சிறார்களைக் கண்டு குருசாமிப் பண்டாரத்திற்குக் குதூகலம்குதித்தெழும்பும் ஆனால் இந்தக் குதூகலம் கொஞ்ச நேரத்திறகுத்தான். திரும்பிவரும்போது மீண்டும் அழுகையுடன் வருவாள் மீனாட்சி. இப்படியே கவலையற்றுச் சென்று கொண்டிருந்தது அவர்களின் இளமை நாட்கள்.

காலம் உருண்டோடியது. மீனாட்சியின் மேனி யௌவனம் என்ற அழகாபரணத்தால் ஜ்வலித்தது. அவள் நடையும் பார்வையும், மிடுக்கும் எல்லாமே தனிச்சோபையுடன் பிரகாசித்தன. வேலுச்சாமி இதைக் கண்டு சொக்கிப் போனான். இந்த மின்னும் நட்சத்திரம் தனக்கேதான் என்று இன்பக் கனவு கண்டான்.

ஆனால் இந்தக் காலம் இருக்கிறதே அது கொடிய ஓர் விரோதி. நமக்குவேண்டியநேரத்தில் வேண்டியதைக் கிடைக்கவிடாமல்தடுப்பதில் இதற்கு ஓர் விளையாட்டுமகிழ்ச்சி. 'இவ்வளவு நாளும் நானும் மீனாட்சியும் ஒன்றாய்க் கைகோர்த்து ஆடிப்பாடி மகிழ்ந்து கவலையற்ற பொழுது போக்கில் இருந்தோம். இப்போது மட்டும் என்ன வந்துவிட்டது? ஏன் இப்பொழுதும் அதேபோல் கைகோர்த்து விளையாடலாகாது" என்ற விபரீத எண்ணம் வேலுச்சாமிக்குத் தோன்றியது. ஆனால் பருவம் என்ற காலவிளையாட்டு அதற்கு இடம் கொடுக்கவில்லை. குருசாமியும்இதற்கு இடமளிக்கவில்லை.

ஒருதடவைவஸந்தகாலம் வந்தது. பூக்களெல்லாம் வைர வைடூரிய மணிகளைப் போல் ஜ்வலித்தன. புள்ளினம் இனிய குரல்கொடுத்தது. மந்தமாருதம்தவழ்ந்து வந்தது பௌர்ணமி நிலவு பால்போல் பொழிந்து கொண்டிருந்தது' மீனாட்சியைத் தடாகக்கரையில் சந்தித்தான் வேலுச்சாமி. இடுப்பிலே குடததைவைத்துக்கொண்டு நடனமாடி வந்தாள் அவள். அந்த அழகை வர்ணிக்க ஒரு கவிஞன் தான் வேண்டும் ஆயினும் வேலுச்சாமியின் மனதில் கூட கவிதைப் பெருக்கு உண்டாயிற்று என்றால் அந்த அழகை எவ்விதம் வர்ணிப்பது?

வந்தவள் அவனைத் திரும்பிப் பார்க்கவில்லை. குடத்திலே நீரை மொண்டு ஒரு வீச்சுவீசி இடுப்பில் வைத்தாள் லாவகமாக. ஆனால் வேலுச்சாமி பாய்ந்து சென்று அவள் கையைப் பிடித்துக் கொண்டான். "என்ன மீனாட்சி. ஒரு மாதிரியாய் இருக்கிறாயே. என்மேல் கோபமா என்ன? என்னுடன் பேசமாட்டாயா" என்று கெஞ்சினான். மீனாட்சி அவனை ஏற இறங்கப் பார்த்தாள். அவளுக்குச் சிரிப்பும் அழுகையும்கலந்து வந்தது அதை வெளியே காட்டிக்கொள்ளாமல் "விடு என்னை. இனிமேல் உன்னுடன் எனக்கென்ன பேச்சு" என்றாள் ஆயினும் அவளை அறியாமலேயே கண்களிலிருந்துமளமளவென நீர் சுரந்தது; இதைக் கண்டவேலுச்சாமியின் இதயத்தில் ஈட்டியாற்குத்தியதுபோல் இருந்தது. அவள் கண்ணீரை வாத்ஸல்யத்துடன் தன் மேலங்கியினால் துடைத்துவிட்டான கையிலிருந்த குடத்தை வாங்கி கரையில் வைத்துவிட்டு அவளுடன் தடாகக் கரையில் உட்கார்ந்தான்.

"இனி உன்னுடன் பேசக் கூடாதாம். [illegible] குக் கல்யாணம் செய்துதர முடியாதாம். அப்பாவுடன் சேர்ந்து புஷ்பத் தோ[illegible] பயிரிட உன்னால் [illegible] வில்லையாம். நீ பெரிய சோம்பேறி என்றும், பக்கத்தூரில் பரமசிவப் பண்டாரத்திற்கு என்னைக் கல்யாணம் செய்து கொடுப்பதற்கு முடிவு செய்துவிட்டதாகவும் அப்பா சொன்னார். நான் எவ்வளவோ மன்றாடினேன். அழுதேன். ஆனால் கண்டிப்பாக அவர் மறுத்துவிட்டார். இவ்வளவு நாள் உன்னை வைத்துச்சோறு போட்டதே பெரிய காரியமாம்" விக்கலும் விம்மலுமாக மீனாட்சி இதைச் சொல்லி முடித்தாள்.

வேலுச்சாமி பண்டாரம் இதைக கேட்டுத் திகைத்தான் கொஞ்ச நாளாகவே தன் மாமன் தன்னுடன் சரியாக முகம் கொடுத்துப் பேசுவதில்லை என்பதின் ரகசியம் இப்போதுதான் தனக்குத் தெரிந்ததாக உணர்ந்தான் ஆயினும் எதை வேண்டுமானாலும் சகித்துக்கொள்ளலாம் மீனாட்சியை இழப்பதானால் இந்த உலகத்தையே இழந்துவிடலாமே. எனவே இலகுவில் இந்த ஏற்பாட்டுக்கு மனம் இசையவில்லை அவன் கண்கள் நீரைக் கக்கின.

மீனாட்சியின் கையைப் பிடித்துக்கொண்ட வேலுச்சாமி "மீனா நான் உன்னையேதான் மணப்பேன் சிறு வயது முதல் ஒன்றாக விளையாடி மகிழ்ந்த நாம் எப்போதும் ஒன்றாகவே இருப்போம். எனக்குச் சத்தியம் செய்துகொடு வேறொருவரை மனதால் கூட நினைப்பதில்லை என்று சத்தியம் செய்" என்று உணர்ச்சிப் பெருக்கால் கூறினான். மீனா அவ்விதமே செய்தாள் அவளுக்கு அழுகை பொத்துக் கொண்டு வந்தது

காலதேவன் விளையாடிக் கொண்டே வந்தான். காதலர் இருவரைப் பிரித்து வைப்பதில் அவனுக்கு என்ன விளையாட்டோ தெரியாது. பரமசிவப் பண்டாரத்திற்கும் மீனாவுக்கும் விவாகம் நடந்துவிட்டது. சித்திரப் பதுமையை கிழவனுக்கு பலிகொடுத்துவிட்டார்கள் அபலைப் பெண் என்ன செய்வாள்? அழுது பிரலாபித்தாள். இதைவிட வேறு என்னதான் செய்ய முடியும்?

வேலுச்சாமி புழுவாய்த் துடித்தான் மீனா தன்னை வஞ்சித்து விட்டாள் என அவன்நினைக்கவில்லை. அதற்குப் பதிலாக கடவுளே தன்னை வஞ்சித்து விட்டதாக எண்ணினான்.

பழைய சம்பவங்கள் அவனை என்னென்னவோ செய்தன தடாகக் கரையில் வந்து உட்கார்ந்தான் மீனாவின் பொன் முகம் ஸ்படிக நீர்த் தடாகத்தில் தெரிந்தது. சடாரென முகத்தைத் தூக்கி எதிரே [illegible] களெல்லாம் மீனாவின் கண்களாகக் காட்சியளித்தன [illegible] செய்தாற்போல் அவனுக்குத்தோன்றியது.

## ஆஸ்பத்திரியில்...

7-ம் பக்கத் தொடர்ச்சி

லதைப் போலிருந்தன. ஆனால் போலின் உடலமைப்பு வித்தியாசமாக இருந்தது.

பின்னர், போலின் உடலினின்று சிறிய தோல் துண்டொன்றை வெட்டி பிலிப்பின் உடலில் ஒட்டவைத்தார்கள். ஒட்டவில்லை. தோல் துண்டு காய்ந்துவிட்டது. ஆனால் எர்னஸ்டின் தோல் துண்டு பிலிப்பின் உடலில் ஒட்டிக்கொண்டது. காயவில்லை

ஆகவே சந்தேகங்கள் அகன்றுவிட்டன. கோர்ட் உத்தரவின்மீது சிறுவர்கள் மீண்டும் மாறறப்பட்டனர்.

திருமதி வோட்டர், எர்னஸ்டின்மீது அளவு கடந்த அன்பு வைத்திருந்ததால், தயக்கத்துடன் போலை ஏற்றுக் கொண்டாள். ஜோய் தம்பதிகளுக்கும் இதில் சந்தோஷமில்லை. 'எனது உண்மையான மகன் கிடைத்துவிட்டானென்றாலும் நான் ஒரு குழந்தையை (போலை) இழந்து விட்டேனே!" என்று திருமதி ஜோய் அழுதாள்.

எர்னஸ்டுக்கு சந்தோஷம்தான். ஏன், புதிதாகக் கிடைத்த பெற்றோர்களில் ஒரு தந்தையும் அவனுக்கு கிடைத்திருக்கிறாரல்லவா? ஆனால் திருமதி வோட்டர் பணக்காரியாதலால் போலுக்கு ஏராளமான விளையாட்டுச் சாமான்கள் கிடைத்தன.

போல் தந்தையைப்போலிருக்கிறானென்பதையும், அவன் காலம் சென்ற தனது கணவனின் பிரதிபிம்பம்தான் என்பதையும் 11 வருடங்களுக்குப் பிறகு இப்பொழுது திருமதி வோட்டர் உணருகின்றாள், இரட்டைச் சிறுவர்களிருவரும் இணைபிரியாது வாழ்கிறார்கள.




## கர்ப்பிணி

ஆசிரியர் டாக்டர் கவி எஸ் ஏ. சஞ்சீவி, லைப் பட்ளிகேஷன்ஸ், மயிலாப்பூர். விலை ரூ 1-00 இலங்கையில் கிடைக்குமிடம் மோஹன் குமார் அன்ட் கோ, தபால் பெட்டி 1201, கொழும்பு.

சிசு ஒரு சிற்பம். அது வடிக்கப்பட வேண்டிய கலா ஆலயம் கர்ப்பிணி ஆலயம் சுத்தமாகவும் பலமாகவும் இருக்கவேண்டும் பசுமையுள்ள பயிரைப் பெற நிலத்தைப் பாதுகாக்கவேண்டாமா? என்று கேட்கிறார் ஆசிரியர் டாக்டர் சஞ்சீவி தமது முன்னுரையில்

72 பக்கங்களை கொண்ட ஒரு சின்னஞ் சிறு நூலானாலும் இது ஒரு அற்புதமான நூல் என்றே சொல்லவேண்டும். கர்ப்ப சாஸ்திரம் சம்பந்தமான விஷயங்களை நன்கு அமைக்கப்பட்ட ஒரு சிறு கதைக்குள்ள சுவையோடும் விறுவிறுப்போடும் எடுத்துக் கூறும் இந்த ஆசிரியரின் நூல் அமைப்பையும் தமிழ் நடையையும் எவ்வளவு போற்றினாலும் தகும். கர்ப்பிணிகள் அனுஷ்டிக்க வேண்டிய விதி முறைகளையெல்லாம் டாக்டர் ரோசாராஜம், லலிதா ஆகிய மூன்று பாத்திரங்களைப் பிரதானமாக வைத்துக் கொண்டு கதை பூங்காகவே விளக்கிவிடும் இந்நூலை கர்ப்பிணிகள் மட்டுமல்ல, என்றோ ஒரு நாள் கர்ப்பிணிகளாகப் போகும் யுவதிகளும், கர்ப்பிணிகளைப் பேணவேண்டியிருக்குப் தாய்மார்களும் தாதிமார்களும் ஏன கணவன்மார்களும்கூட அவசியப் படிக்க வேண்டும் என்று சிபார்சு செய்கிறோம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் பாடசாலைகளில் சிங்களம் வேண்டாம்

## மேல்மாகாண தமிழ் ஆசிரியர் சங்கத் தீர்மானம்

**“சிங்களப் பாடசாலைகளில் தமிழும் தமிழ் பாடசாலைகளில் சிங்களமும் கட்டாய பாடமாகக் கற்பிக்க வேண்டும்” என்ற ஒரு தீர்மானம் கடந்த சனிக்கிழமை கொழும்பு சென் லூசியஸ் தமிழ் பாடசாலையில் நடைபெற்ற மேல் மாகாணத் தமிழ் ஆசிரியர் சங்க நிர்வாக சபையில் கொண்டுவரப்பட்டு “தமிழ் பாடசாலைகளில் சிங்களம் வேண்டாம்” என்று ஏகமனதாக நிராகரிக்கப்பட்டது**

மேற்படி நிர்வாக சபைக் கூட்டத்திற்கு சங்கத் தலைவர் திரு கே வி செல்வத்துரை தலைமை வகித்தார்.

கூட்ட ஆரம்பத்தில் ஒரு பொதுக் கூட்டம் நடத்துவதுபற்றியும் விளையாட்டுப் போட்டி, 5-ம் வகுப்புப் பரீட்சை முதலியன பற்றியும் ஆலோசிக்கப்பட்டது.

அதன் பின்னர் அகில இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கக் காரியதரிசி திரு ஜே ஜே. எம் தங்கராஜா மேல மாகாண ஆசிரிய சங்கத்தை அவமதித்து எழுதிய கடிதத்திற்கு அவர் பகிரங்க மன்னிப்பு கேட்கவேண்டுமென அகில இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்க நிர்வாக சபை செய்த தீர்மானத்தைத் தலைவர் விளக்கினர். திரு ஜே ஜே எம் தங்கராஜாவின் மன்னிப்புக் கடிதம் பரிசீலனை செய்யப்பட்டது அது முறையான ஒரு மன்னிப்புக் கடிதமாய் அமையவில்லையென்ற காரணத்தால் அக் கடிதத்தை அ. இ. த. ஆ சங்கத் தலைவர் திரு என் தம்பிரத்தினம் பரிசீலனை செய்து காரியதரிசி திரு தங்கராஜாமீது உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதைப் பிரேரித்தவர்: திரு வ. இராசையா; அனுவதித்தவர்: திரு சி. செல்வநாயகம்.

சிங்களப் பாடசாலைகளில் தமிழும் தமிழ் பாடசாலைகளில் சிங்களமும் கட்டாய பாடமாகக் கற்பிக்கப்பட வேண்டும் என்ற பிரேரணை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது தலைவர் கே. வி செல்லத்துரை இலங்கையின் பாஷைப் பிரச்னை இன்று முக்கியத்துவம் அடைந்திருப்பதால அதை நுணுகி ஆராயப்படவேண்டியதொன்ருகிறது எனக் குறிப்பிட்டார்.

வித்துவான் வேலுநாயகம் பிரேரணையைப் பலமாக எதிர்த்துப் பேசினர். அவர் கூறினர்: “இலங்கையின் சமுதாய அமைப்பை நோக்கினல தமிழ் பாடசாலைகளில சிங்களமும் சிங்களப் பாடசாலைகளில் தமிழும் கட்டாய பாடமாக்குவது ஒரு காலத்தில் தமிழருக்கும் தமிழ் பாஷைக்கும் அழிவை உண்டாக்குவதாகவிருக்கும்.”

“ஆயிரக்கணக்கான மைலகளுக்கப்பால் உள்ள ஆங்கிலேயரின் பாஷையைப் படித்தோம். அதனல் நம்மில பலர் ஆங்கில நாகரீகத்தைப் பின்பற்றிக குட்டித் துரைமாரானுர்கள். தமிழும் தமிழர் சால்பும் புறக்கணிக்கப்பட்டன. அதிர்ஷ்டவசமாக ஆங்கிலேயர் வெகு தொலைவில் இருந்ததாலும் அவர்கள் தோல் வெளுப்பாய் இருந்ததாலும் நாம் அனைவரும் ஆங்கிலேயராய் மாருமல் தப்பினேம். இதே கதி சிங்களத்தனுல் தமிழர்களுக்கு ஏற்படவேண்டாம்.

‘சிங்களத்தைத் தமிழர் படிக்க முயன்ருல் ஒரு காலத்தில் இலஙகை முழுவதிலும் உளளவர்களுக்கு சிஙகளம் தெரியவரும் உடனே சிங்களவரைப் பெரும்பான்மையாகக் கொண்ட அரசாங்கம் என்ன சொல்லும் தெரியுமா? “எல்லோருக்கும் சிஙகளம் தெரியத்தானே செய்கிறது. எனவே சிங்களத்தையே இலங்கையின் ஏக பாஷையாக்குவோம்” என்று சட்டமியற்றும். அப்போது சிறிய மீன் பெரிய மீனுக்கு இரையாவதுபோல் தமிழும் தமிழரும் சிங்களத்திற்கும் சிங்களவருக்கும் இரையாக வேண்டியது தான்”

இவரை ஆதரித்துப் பேசிய திரு சி. செல்வநாயகமும் இப் பிரேரணையை நிராகரிக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

நன்ருக ஆலோசிக்கப்பட்டபின் பிரேரணை ஏகமனதாக நிராகரிக்கப்பட்டது.

---

### பாரூக் மன்னர்......

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

துகொண்டார். பரூக்கின் தாயார், ஒரு சாதாரண மனிதனை மணந்துகொண்டதற்காக பரூக்கால் 1950ல் நாடு கடத்தப்பட்ட தனது மகளுடன் அமெரிக்காவில் வசிககிருர்


எகிப்தில் ராணுவப் புரட்சி ஏற்பட்டாலும் அங்கு ராணுவ சர்வாதிகாரம் ஏற்படாது. பரூக மன்னரின் ஜன்ம விரோதிகளான வாப்து கட்சித் தலைவர்கள் பிரதமர் அலிமேஹர் பாஷாவின் அழைப்பின் மீது ஐரோப்பாவிலிருந்து எகிப்துக்கு விரைந்து வந்திருக்குகிருர்கள். எகிப்தில் சமீபத்தில் பொதுத் தேர்தல் நடைபெறுமென்றும் ஒரு ஜனநாயக ஆட்சி ஏற்படுமென்றும் தெரிகிறது. உலகில் முடியாட்சி வீழ்ந்து குடியாட்சி ஏற்படுகின்ற 20 ம் நூற்ருண்டில் எகிப்திலும் முடியாட்சிககு காலடைவில் முடிவு கட்டப்பட்டு மக்களாட்சி மலருமென்று எதிர்பார்க்கலாம்.

—முகரா


4 தலைமுறை பரம்பரை வைத்தியமும் 40 வருட அனுபவமும் வாய்ந்த

**டாக்டர் A. S. டானியல் விஜயம்**

**பதுளை, பண்டாரவளை, ஹட்டன் வாசிகளுக்கு ஓர் அரிய தருணம்.**



10, 11ந் தேதிகளில் பதுளை ஜெமினி ஹோட்டல்.

12, 13ந் தேதிகளில் பண்டாரவளை சிங்ககிரி ஹோட்டல்.

14, 15, 16-ந் தேதிகளில் ஹட்டன் கஸ்ரோ ஹோட்டல.

17ந் தேதி நாவலூட், 99. பஜார்தெரு.

**மேற்கண்ட தேதிகளில் மேற்கண்ட இடங்களில் தங்குவார்.**

உஙகள் வியாதி எதுவானுலும் நேரில்தெரிந்து மருந்துபெற்று சுகமடைய அருமதருணத்தை தவறவிடாதிர்கள்

A. S. டானியல் அவர்கள் கடந்த 40 ஆண்டுகளுக்கு மேலாக வைத்தியம் செய்து அனுபவமுடையவர்கள. நான்கு தலைமுறையாக வைத்தியமே செயதுவரும் இவர்களின பரம்பரை வைத்தியத்தைப்பற்றி அதிகமாகஎழுத வேண்டியதில்லை.

எவ்விதமான வியாதியஸ்தர்களும் ஆலோசனை பெறலாம், வியாதியை பரீட்சித்துத் தெரிந்தபின் உத்தரவாதமாக சிகிச்சை அளிப்பார். மலையாள அனுபவநுட்ப முறைப்படி ஔஷதம் அமைத்து கொடுக்கப்படும்.

**ஆயுர்வேத டாக்டர் A. S. டானியல்**

# மலையாள மெடிகல் ஹால்

**176, செட்டியார் தெரு, கொழும்பு.**



# தாம்பர பஸ்பம்

பழனி தண்டபாணி வைத்தியசாலையாரால் சிறப்புடன் தயாரிக்கப்பெறுகிற அரும்பெரும் மருந்துகளில் ஒன்று. ஆயிரக்கணக்கில் பணம் செலவு செய்து ஆறுமாத காலம் அரும்பாடுபட்டுத் தயாரிக்கப்படும் கற்பமருந்து.

22 ஆண்டுகளாக அனுபவத்தில் கையாண்டு பலஆயிரக்கணக்கான நோயாளிகளுக்கு விடுதலையளித்து ஜெயக்கொடிநாட்டிய சித்தமருந்து இதுவே.

இன்றைக்கு அமெரிக்கா. ஐரோப்பிய நாடுகளில் மருந்துவகைகளில் தாமிரம் என்னும் உலோகத்தின் முக்கியத்தை அறிந்துகொண்டிருக்கிருர்கள், ஆனல் பல ஆயிரம ஆண்டுகளுக்கு முன்பே சித்த முனிவர்களால் தமிழ் ஏடுகளுல் இக்கருத்து வெளியிடபபட்டு சித்த வைத்தியர்களால் கையாளப்பட்டு வருகிறது.

வாத நோய்களுக்கெல்லாம் தாம்பர பஸ்பம் சிறந்த மருந்து. நரம்பைப்பற்றியது வாதம். நரப்புகள் மெலிவுற்று கை கால் மொழிக்குமொழி வலி, வீக்கம், நீட்டவும் மடக்கவும் கஷ்டப்படுதல, கை கால் இடுப்புவலி, உளைவு வியாதிகளும் முந்திய வெட்டைநோய், கிரந்தி (SYPHLLIS) ரணம், அரையாப்பு கண்டமாலை, பவுத்திரம் நீர்த்தாரை, ரணம் தேகத்தில் ஊரல், அரிப்பு, தடிப்பு, புத்தரணங்களும் (EXZEMA) குன்மம், வாய்வு, வயிறறுவலி, பெண்கள் சூதகக்கட்டு உடம்பு பூரிப்பு கைகால் அசதி, பலவீனம், மபக்கம, வாந்தி, குமட்டல், மாதாந்திர வயிற்றுவலிகளும் ரத்தத்தைப்பற்றிய அநேக நோய்களும், தோலைப்பற்றிய எல்லா நோய்களும் தாம்பர பஸ்பத்தால் குணமாகின்றன.

ஆஸ்த்மா, காசம், க்ஷயம், அண்டவாதம், விரைவீக்கம் ஆகிய நோய்களுக்கும் தாம்பர பஸ்பம் சேர்த்துக்கொடுக்க நல்ல பலன் உண்டு.

நீரழிவுக்கு (DIABETES) இது நிகரற்ற மருந்து என்பதை அனுபவத்தில் கண்டுள்ளோம.

1 மண்டலம் 48 நாள் (காலை மாலையாக 98 வேளை) சாப்பிடக்கூடிய மருந்துகள் தாம்பர பஸ்பமும் அனுபானம் மேகச்சூரணமும் விலை ரூ 45-0-0.

நோய் விபரம் எழுதினல் தலைமைவைத்தியருடன் ஆலோசித்து பகலில் சாப்பிட லேகியமும் தேய்த்துக்குளிக்க தைலமும் தீர்மானித்து அனுப்பலாம் ரூ 20-0-0 M. O அனுப்பவும். M. O. அனுப்பினல் ரசீதும் அனுப்பவும்.

**கேட்லாக் இனம்!**

# தண்டபாணி வைத்தியசாலை

**பெரிய கடை வீதி, பழனி, (S. India)**

**Thandapani medical Hall, PALANI (S. India)**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகத்தான இரண்டாவது வாரம்!



## செண்ட்ரல் [கொழும்பு]

ஞாயிறுக் காட்சிகள் காலை 10-மணி பிற்பகல் 2-30, 6 மணி 9-30 மணிக்கு மற்றைய நாட்களில்: வழமைபோல 6-மணிக்கும் இரவு 9-30 மணிக்கும்.



## மகேந்திரா (யாழ்ப்பாணம்)

இன்று காலை 10-15 மணிக்கும் மாலை 6-15, 9-30 மணிக்கும்

## ஜோதி (திரிகோணமலை)

இன்று பகல் 2-30, மாலை 6-15, 9-30 மணிக்கும்


## கடலலைகளைவிட அதிகமாக மனவெழுச்சியைப் பேரலை எனக் கிளப்பும் ஓர் கதை

பத்திரிகைகளின் புகழுரைகள்:

"ஆரம்பம் முதல் முடிவு வரை அதன் விறுவிறுப்பு அதிகரிக்கிறது" — சுதந்திரன்
"காதல் தமிழ்ப் பட உலகிற்கே ஓர் முன்மாதிரி பார்க்கத்தக்க ஓர் படம்" — ஒப்ஸர்வர்
"காதல் ஒரு பெரிய சாதற் சித்திரம்" — தினமின
"பானுமதி சிறப்புடன் பிரகாசிக்கிறார். எல்லோரும் அப்படத்தைப் பாருங்கள்" — வீரகேசரி

## ஒவ்வொரு காட்சியிலும் நூற்றுக் கணக்கானோர் இடமின்றித் திரும்புகின்றனர்.

★



★

பானுமதி,
நாகேஸ்வரராவ்.
கிருஷ்ணமூர்த்தி

★

பரணி பிக்சரின்

# காதல்

(தமிழ்)

கதை:
**பி. பானுமதி,**

டைரக்ஷன்:
**இராமகிருஷ்ண**

பாட்டுக்கள்
**டி. சந்தனம்**

காமரா:
**கமால்கோஷ்**

சங்கீதம்:
**லேட் சி. ஆர். சுப்பராமன்**



ரிசர்வ் ஆசனங்கள்

★ முற்கூட்டியே பதிவுசெய்து கொள்வது நலம்.

★ பால்கனி சீட்கள் மாத்திரம் முற்கூட்டியே பதிவுசெய்யலாம். ஆனால் படம் தொடங்குவதற்கு முன்னர் தான் டிக்கட்டுகள் விற்பனை செய்யப்படும்.

★ கியூ வரிசையில் நின்று வருபவர்களுக்கு டிக்கட்டுகள் மாத்திரம் கொடுக்கப்படும்.

★ சகல பாஸ்களும், சலுகைகளும் மறு அறிவித்தல்வரை ரத்துச்செய்யப்பட்டுள்ளது.

போன்: 5133.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண் அல்லது கௌரவம்

## திரைஉலகில் ஓர் புரட்சி

பிரபல இந்திய படத் தயாரிப்பாளரும், டைரக்டருமான மெஹ்பூப் கானின் அபூர்வ சாதனையி னால் கீழைத்தேச சினிமா உலகில் புரட்சிகரமான புது சகாப்தம் ஆரம்பமாகியிருக்கிறது. இது கீழைத் தேச மக்களாகிய நமக்கெல்லாம் பெருமைதரக்கூடிய செய்தி.

பிரபல ஹாலிவுட் படக் கம்பனிகளான எம். ஜி. எம்; பாரமான்ட்; ஆர். கே. ரேடியோ: வார்னர் பிரதர்ஸ்; 20வது பொக்ஸ் செஞ்சுரி ஆகியவற்றின படங்களுக்கு ஈடாக மெஹ்பூப் ஆனேயும் தயாரித்திருப்பதாகத் தெரிகிறது. முற்றிலும் இயற்கை வர்ணத்தில் (டெக்னிகலர்) தயாரிக்கப்பட்ட இப்படம் இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்ட முதல் கலர்ப்படமாகும். தமிழ், ஹிந்தி, ஆங்கிலம் ஆகிய முப்பாஷைகளிலும் இப்படத்தை அவர் சிருஷ்டித்திருக்கிறார். பணப்பெட்டியை நிரப்புவதே நோக்கமாகக் கொண்டு படத் தொழிலில் இறங்கியவரல்ல மெஹ்பூப். இந்த உண்மையை அவர் தயாரித்துள்ள ரொட்டி, அன்டாஸ், அமர், அதா, ஹுமாயுன், ஷ்மா, தோதீர் ஆகிய படக் கதைகளிலிருந்து தெரிந்து கொள்ளலாம். பொழுதுபோக்கு அம்சத்தைவிட அவரது கதைகளில் கருத்துக்களே முதலிடம் வகிக்கும் ஆன்படக் கதை கூட அத்தகைய சீர்திருத்த கருத்துக்கள் நிறைந்த சமூகச் சித்திரமே. ஐம்பது லட்சம் ரூபாய்களை செலவிட்டுத் தயாரித்துள்ள இக்கதையில் குடிமக்களின் உரிமைப் போராட்டத்திற்கு எதிரில் முடிமன்னனின் சக்தி முறியடிக்கப்படும் முற்போக்கு அம்சமே முதலிடம் வகிக்கிறது. குடிகளின அரசு—மக்களின் அரசாங்கம் என்ற மனோபாவம் நாளும் பொழுதும் வளர்ந்துவரும் இக்காலத்தில் இப்படத்திற்கு அமோகமான வரவேற்பு இருக்குமென்று சொல்ல வேண்டியதில்லை.

இந்திய திரை உலகில் முதல்தர வரிசையில் மின்னும் நடசேத்திரங்களான திலீபகுமார், பிரேம் நாத் ஆகியோர்களுடன் புதுமுகம் நாதுரா, குக்கூ, முகரி, ஷிலா நாயக், முராத், நீலாப்பாய், மாயா முதலியவர்கள் நடித்திருக்கிறார்கள்.

தென்னாட்டின் சிறந்த வசன கர்த்தா பி. எஸ். ராமையா இப்படத்தின் தமிழ் வசனங்களை எழுதியுள்ளார். பாட்டுக்கள் கம்பதாசனால் அமைக்கப்பட்டிருக்கின்றன.

இப்படம் இப்போது எல்பின்ஸ்டன் (கொழும்பு), ரொக்ஸி (வெள்ளவத்தை), நெல்சன் (திரிகோணமலை), அசோகமாலா (நீர்கொழும்பு) ஆகிய திரைகளில திரையிடப்படுகிறது.

யாழ்ப்பாணம் வின்ஸர் ஆம கண்டி வேல்ஸ் தியேட்டரிலும் இம் மாதம் 8ந் திகதி முதல் திரையிடப்படும்.

எமது விமர்சனம் அடுத்த வாரம் வெளியாகும்.

### ரஷிய கோஷ்டிக்கு பாரசூட் பைபிள்

தென்பரோ— பைபிள் புத்தகங்களை பலூன்களில் கட்டி ரஷிய கோஷ்டி நாடுகளில ஆகாய மார்க்கமாக இறக்க சர்வதேச சர்ச்சுகள சங்கம் தீர்மானித்திருக்கிறது.

படிக்கிறீர்களா?

'பாரததேவி'

மாலை 4 மணிக்கே கொழும்பில் கிடைக்கும்

மழை காலத்திற்கும் வெயில் காலத்திற்கும் ஏற்ற உயர்தரக் குடைகள்

ஒட்டக மார்க் இங்கிலீஸ் மேக் குடைகளே




ரெஜிஸ்டர் நம்; 12636

குறைந்த விலையில் உயர்ந்த ரகமான குடை ஒட்டக மார்க் குடை ஒன்றுதான
எனவே
ஒட்டக மார்க்கு குடையையே எப்பொழுதும் கேட்டு வாங்குங்கள்

வியாபாரிகளுக்கு விலையில் விசேஷ சலுகைகள் உண்டு

★

விவரத்திற்கு எழுதவும் அன்றேல நேரில் விஜயம செய்யவும்

ஐக்கியா டிரூப்பரி ஸ்டோர்ஸ்

6 சைனா வீதி, கொழும்பு-11 போன்: 5118

முருகன் சென்ட்ரல் மனோகரா

(ஜிந்துப்பிட்டி) (மாத்தளை) (யாழ்ப்பாணம்)

எங்கும் என் தங்கை என்பதே பேச்சு

ஆரம்பநாள் தொடக்கம் ஆயிரக்கணக் காணோர் உள்ளத்தைக் கவர்ந்துவிட்டாள்!

3-வது வெற்றி மாதம்!




சோகத்திற்கோர் எடுத்துக் காட்டு!

பட உலகில் ஓர் புதுமை!

கதை உலகில் ஓர் புரட்சி!

என் தங்கை


மாதுரிதேவி, ஈ.வி. சரோஜா; எம். ஜி. ராமச்சந்திரன் வி.சுசீலா, நரசிம்மபாரதி.

அழகும் - இனிமையையும் படைத்த கடவுள் கண்ணைப் பறித்துவிட்டார் என்றால் காதல் சோகம் - கானம் நிறைந்த இப்படம் எப்படியிருக்கும என்பதை திரையில் கண்டு ஆனந்தியுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜூலை மீ போனஸ் போட்டி
மூன்றே வாரங்களில்
பரிசு ரூ. 48,000
ஒவ்வொரு போட்டிக்கும் 12 கூப்பன்களும் 3 வித மான விமர்சனங்களும் ரூ 3 ஸ்டாம்புகளாக அல்லது போஸ்டல் ஆர்டர்களாக அனுப்பிப் பெறலாம்.
மோகன் & கோ., லிட்.
66, 1/4, 1ம் குறுக்குத் தெரு, கொழும்பு.



ரெஜிஸ்ரேட் நம்பர் 13207.
இலங்கையின் எல்லாப் பாகங்களிலும் கமலா பப்படத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.
ஒருமுறை பாவித்துப் பாருங்கள்!


உணவே மனிதனுக்கு ஊக்கம் உண்டாக்குவது!!
அந்த உணவை ருசிப்படுத்துவது
கமலா பப்படம்
முதல்ரக உழுந்தால் சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்டது மணம், குணம், ருசியுள்ளது
மொத்த வியாபாரிகளுக்கு சலுகை உண்டு
Proprietor: பி. எம். ஹமீது,
197, கெய்ஸர் வீதி, கொழும்பு



ஒளியிற் சிறந்தது சூரிய பிரகாசம்
பீடியிற் சிறந்தது கமலா பீடியே
கமலா, லீலா பீடிகளும் பீடிக்குத் தேவையான நாகப்பூர், சிங்கறணி இலைகளும், ஆக்கூழ் நிப்பாணிபுகையிலைகளும் சகாயமான விலைக்கு பெற்றுக்கொள்ளலாம்.
வி. பி. அவசியம் கவனிக்கப்படும்.
கமலா ஸ்டோர்ஸ்
Proprietor S. V. பொன்னம்பலம்
15. செட்டியார் தெரு, கொழும்பு.
போன்; 3597. தந்தி: தாமரை.



மாதவிடாய் நின்றுபோனதா?
நிகரற்ற மருந்து (தேவி பில்ஸ்) Regd. by the Central Drugs Laboratory of Govt. of India, Under No. CDL/688
எக்காரணத்தினாலும் எத்தனை மாதங்களானாலும் நின்றுபோன மாதவிடாய் அதிசுலபமாகவும் அநிசேக்கிரமாகவும் தவறாமல் உடனே வெளியாகும். அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம் உத்திரவாதமுள்ளது. போலி மருந்துகளை வாங்கி ஏமாறுதீர்கள் சாதாரண கேஸ்களுக்கு (Ordinary) விலை ரூ 10-0-0 மாதங்களான கேஸ்களுக்கு (Special) ரூ. 13-0-0 (தபால் செலவு தனி)
கர்ப்பத்தடை நிகரற்ற மருந்து (ஸ்பெக் பில்ஸ்) Government Registered No. 266
12 நாட்கள் சாப்பிட்டால் 6 வருஷத்திற்கு சர்வ நிச்சயமாக கருவைத்தடுக்கும். மாதவிடாய் தவறாது. அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம். போலி மருந்துகளை வாங்கி ஏமாறுதீர்கள். (ஸ்பெக் ஜெல்லி) உபயோகித்தால் டெம்பாவரியாக கருவை தடுக்கும். பில்ஸ் விலை ரூ. 15-0-0 ஜெல்லி விலை ரூ. 8-8-0 (தபால் செலவு தனி)
சிலோன் ஏஜண்ட்: New Colombo Medical Stores, 82, Main St., Colombo
M/grs SEENU & CO., POST BOX. 1638. MADRAS-1
பிராஞ்ச் 134, SERANGOON ROAD. சிங்கப்பூர்.





## பிச்சைக்காரனை நேசி

ஒரு ஊரில் ஏழை ஒருவன் உண்பதற்கு உணவின்றி நான்கு நாட்கள் பட்டினி கிடந்தான். ஐந்தாவது நாள் அவனால் பசியின் கொடுமை பொறுக்கமுடியாமல் ஒரு ஜமீன்தார் வீட்டில் போய் 'ஐயா எசமாங்களே, பசியோ என்னாலே பொறுக்க முடியவில்லை. சாப்பிட்டோ நான்கு நாட்களாகின்றன ஏதாவது கொஞ்சம் தர்மம் கொடுங்க சாமி" என்று கெஞ்சி அழுதான். ஆனால் கருமியான அந்த ஜமீன்தார் அவனை ஏசி நன்றாக அடித்துத் துரத்திவிட்டார். இச்சம்பவங்களை வீட்டினுள்ளிருந்து பார்த்துக்கொண்டிருந்த அவரது மகனான ஜோசப் மனமிரங்கி வீதியை நோக்கிச் சென்றுகொண்டிருந்த அப்பப் பிச்சைக்காரனிடம் வந்து தன் பாக்கெட்டிலிருந்து 25 சதம் சந்தோஷத்துடன் எடுத்துக் கொடுத்தான், அவ்வேழை அவனை பகவானைப்போற்றி நன்றி செலுத்தினான்.

இஞ்ஞாசியஸ்
பூபாலராயன்,
15, அர்ச் சந்தானமாதா தெரு,
குருணைக்கல்.

## விகடத் துணுக்குகள்

### செலவுச் சிக்கனம்

தகப்பன்: வாழ்க்கைச் செலவு அதிகமாகிவிட்டது. நான் இனிமேல் புகை பிடிப்பதை நிறுத்திக் கொள்கிறேன்.

தாய்: நான் மாதாமாதம் புதுப் புடவை எடுத்துக் கொள்வதை நிறுத்திக் கொள்கிறேன்

பையன்: நான்பாடசாலையை நிறுத்திக்கொள்கிறேன்

### துக்கமும் சந்தோஷமும்

சபாபதி: அப்பா நான் ஒன்று சொல்லுகிறேன் கோபித்துக்கொள்ள மாட்டீர்களே?

தகப்பன்: என்னடா, சொல்லி முடி

சம்பந்தன்: அப்பா, நான் இம்முறை 5-ம் வகுப்பில் பெயிலாகிவிட்டேன்.

தகப்பன்: நல்லது சந்தோஷம் நீ இம்முறை சித்தியடைந்து ஆறாவது வகுப்பிற்குச் சென்றால் மாசா மாசம் பணம் கட்டவேணுமே மறு வருடமானால் மாசாமாசம் பணம் கட்ட வேண்டிய தொல்லையில்லையே.

கே. பெற்றிமணி,
றோ. க. பாடசாலை,
புவாச்பிட்டி


செய்திகளை சுடச்சுட தருவது பாரதமுதவி


## ஆடிக் களித்திடுவோம்

சின்னஞ் சிறுவர்களே—அருமை
சிங்காரச் செல்விகளே
எல்லோரும் ஒன்றாக—சேர்ந்து
இணைந்தே வாழ்ந்திடுவோம்

பள்ளிக்குச் சென்றிடுவோம்—நன்றாக
பாடம் படித்திடுவோம்
கல்வி பயின்றிடுவோம்—சிறந்த
கைத தொழில் செய்திடுவோம்

உண்மையே பேசிடுவோம்—காந்திஜீ!
அண்ணலைப் போற்றிடுவோம்
அன்பை வளர்த்திடுவோம்—உலகில்
இன்பமாய் வாழ்ந்திடவே

பொன்னிற வானத்திலே—அழகிய
வெண்ணிலா வந்தவுடன்
பாடி மகிழ்ந்திடுவோம்—கூடி
ஆடிக்களித்திடுவோம்.

"தமிழ் நேசன்"
கண்டி

## உறவினருக்கு உத்தியோகம்

ஒரு பெரிய ஆபீஸில் காலியான உத்தியோகமொன்றுக்கு ஆள் தேவையென்று விளம்பரம் செய்திருந்தனர். எனவே அந்த உத்தியோகத்துக்கு நூற்றுக்கு மேற்பட்டோர் நேரில் விண்ணப்பம் செய்தார்கள். மானேஜர் அவர்களுள் மூவரைத் தெரிவு செய்துகொண்டு மற்றவர்களை அனுப்பிவிட்டார். அந்த மூவரிலும் ஒருவரைத் தெரிவு செய்யவேண்டியிருந்ததால் அவர் முதலாம் ஆளைப் பார்த்து "நீர் செண்டரல் டடமாளிகையில் ஒரு டிக்கட் வாங்கி வாரும் உன் சமர்த்தைப் பார்க்கலாம்" என்று அனுப்பினார். அன்றுதான் அதிலே ஓர் புதுப்படம் ஆரம்பம். இரண்டாம் ஆளைப் பார்த்து 'நீர் மருதானைக்கு டிராமிலேபோய் பஸ்ஸிலே திரும்பிவாரும் பார்க்கலாம்" என்றார். அன்று ஓர் விசேஷ தினமாதலால் ஜன நெருக்கடி அதிகம். மூன்றாம் ஆளைப்பார்த்து ஐந்து ஸ்தான கூட்டல கணக்கு ஒன்றைக் கொடுத்து "இதை போட்டு வையும்" என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார்.

கொஞ்ச நேரத்தில் முதலாம் ஆள் எப்படியோ டிக்கெட் வாங்கி வந்துவிட்டார் இரண்டாம் ஆளும் டிராமிலே போய் பஸ்ஸிலே வந்துவிட்டார். மூன்றாம் ஆள் பத்து முறை கணக்கைப் போட்டு இருக்கிறார் அத்தனையும் தப்பு மூன்றாவது ஆளை வேலைக்கு வைத்துக் கொண்டு மற்ற இருவரையும் போகச்சொல்லி விட்டார். ஸார், ஸார்! அந்த ஆள் ரொம்ப மக்கு ஆச்சே' என்றார் முதலாமவர்.

"மக்கு என்றால் என்ன, அவன் நம்ம மச்சான் மகன் ஆகிறானே" என்றார் மனேஜர்

"இந்தக் காலத்தில் உறவினருக்குத் தான் உத்தியோகம் நாம் வேறு எங்கேயேனும் போய்ப்பார்ப்போம்" என்று மற்ற இருவரும் போய்விட்டனர்.

எம். பீ. பாத்தும்மா
சப்புவத்தை,
தெனிபிட்டிய

## குஷ்டரோகம்

மக்களிடையே காணப்படும் வியாதிகளில் குஷ்டரோகமும் ஒன்று. இது குட்டை, அழுகு கர்ப நோய் என்று பலவாறாக அழைக்கப்படுகிறது. இது முதலில் ஆபிரிக்காவின் தென்பாகமாகிய உஷ்ண பிரதேசத்தில் உற்பத்தியாகி, அங்கே உள்ள அடிமை மனிதர்களை பிறநாடுகளுக்கு ஏற்றி வியாபாரஞ் செய்யத் தொடங்கியதினால் இந்நோய் அவர்களிடமிருந்து பிறநாடுகளிலும் பரவத் தொடங்கியது இது குட்டை என்று சொல்லுகிற கிருமியினால் தான் ஏற்படுகிறது. இக்கிருமி அவிழ்ந்தசுருட்டைப்போல் தோற்றமளிக்கிறது. ஒருவன் குஷ்டரோகியோடு பலநாள் பழகிவருவானாகில் கால வரையில் அவனுக்கும் இது ஒட்டிப்பரவும் விசேஷ இடங்களாகிய மூளை, இரத்தாசியம், சுவாசப்பை, கர்ப்பப்பை முதலியவைகளைக் கெதியில் தாக்காது படிப்படியாகத் தாக்கும். குஷ்டரோகி தன் பிள்ளையோடாயினும் பிறபிள்ளையோடாயினும் நெருங்கிவாழாமலும் பிறரோடு சேர்ந்துவாழாமலும் தனியறையில் வசிக்கவேண்டும்

கே. கனகசூரியம்,
ஏருவூர் சங்கலடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆள் குறைப்பின் பெயரால் பழி வாங்குதல்

## சமரசத்தை மறுக்கும் துரையின் திமிர்

பதுளை பட்டவத்தை தோட்டத்தில் வேலைபார்த்துவரும் தொழிலாளர்களில், தேவைக்கு அதிகமாக சுமார் 100 தொழிலாளர்கள் இருப்பதாகக் காரணங்கூறி முதற்படியாக 30 தொழிலாளர்களுக்கு சமீபத்தில் நோட்டீஸ் கொடுக்கப்பட்டது.

இந்த நோட்டீஸ் சம்பந்தமாக விசாரணை நடத்துவதற்கு, தொழில் தகராறு சட்டப்படி ஒரு மத்தியஸ்தர் தீர்ப்புக்குவிடவேண்டுமென இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கேட்டுக்கொண்டதன்பேரில் இலங்கை தோட்டத் துரைமார் சம்மேளனத்துக்கும், தொழிலாளர் காங்கிரஸுக்குமிடையே ஒரு சமரஷத்திற்கான பேச்சுவார்த்தையை தொழில் கமிஷனர் இலாகா நடத்தி வருவதாகத் தெரிகிறது.

(1) உண்மையாகவே தேவைக்கு அதிகமான தொழிலாளர்கள் தோட்டத்தில் இருக்கிறார்களா?

(2) தோட்டத் துரையின் மனஸ்தாபத்தின்பேரில் தொழிலாளர்களை வெளியேற்றுவதற்கு இவ்வித காரணங்கள் சிருஷ்டிக்கப்படுகின்றனவா?

(3) தோட்டத் துரை குறிப்பிடுவது போன்ற மேற்கூறிய குற்றச் சாட்டுகளின்மீது படசபாதமற்ற முறையில் விசாரணை நடத்தி நீதி வழங்குமாறு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கோரியுள்ளது.

வேற்றுமைகள் நிலவுவதாகவும் எடுத்துக் கூறப்பட்டது.

மேற்கூறிய புகார்களைப் பரிசீலனை செய்ய தொழில் இலாகா உதவி கமிஷனர் திரு குமாரசிங்க பிரஸ்தாப தோட்டத்துக்குச் சென்று ஒரு பூர்வாங்க விசாரணையை நடத்தினார். பின்னர் கீழ்க்கண்ட இரு விஷயங்கள் கவனத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

(1) வேலையைக் குறைத்துச் செய்யும் வழக்கத்தை தொழிலாளர்கள் நடைமுறையில் அனுஷ்டித்ததுண்டா?

(2) தோட்டத் துரைக்கும் தொழிலாளர்களுக்குமிடையே நிலவும் தகராறுகளுக்கான உண்மைக் காரணங்கள் எவை?

இதுபோன்ற பல பிரச்னைகளை விவாதிப்பதற்காக இம் மாதம் 24-ம் தேதி ஒழுங்கு செய்யப்பட்டிருந்த ஒரு கான்பரன்ஸ் ஏதோ காரணத்தையொட்டி ஆகஸ்ட் மாதம் முதல் வாரத்துக்கு ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

### கொங்காதனை கோட்டம்

பதுளையைச் சேர்ந்த கொங்காதனைத் தோட்டம் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் ஆதரவில் சமீபத்தில் ஒரு பொதுக் கூட்டம் அறப்போர் வீரர் திரு பி. எஸ். இராமசாமி தலைமையில் நடைபெற்றது. திரு இராமசாமி பேசுகையில கொழும்பில் நடந்துவரும் அறப்போர் இயக்கத்தில் தான் பங்குபற்றிய சாதனைகளையும், போலீசார் கையாண்ட அடக்குமுறை தர்பாரையும் தெளிவாக எடுத்துக் கூறினார். திருவாளர்கள் வி. எம். முத்தையா, ஆர். காளிமுத்து, ஆர். அருணாசலம், எஸ் ஈ. மணன் ஆகியவர்கள் பேசிய பின்னர் இவ் வருடம் ஆடிப் பூசையை நிறுத்தி அதற்கு செலவு செய்யும் பணத்தை சத்தியாக்கிரக இயக்கத்துக்கு கொடுத்துதவ வேண்டுமென தீர்மானிக்கப்பட்டது.

### சமரசத்தை ஏற்க மறுப்பு

ரக்வானையைச் சேர்ந்த மாதம்பை தோட்டத்தில் வேலைபார்த்துவந்த கன்னியப்பன் என்ற தொழிலாளியை உடனே தோட்டம் விட்டு வெளியேறும்படி நோட்டீஸ் கொடுத்தது தோட்ட நிர்வாகம்.

மேற்படி தொழிலாளி தோட்டம்விட்டு வெளியேறுவதற்கு முன்னால் ஒரு விசாரணை வேண்டுமென இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கோரியது. இவ் விவகாரத்தை சமரசமாக முடிக்கும் நோக்கத்துடன் நோட்டீஸ் வாபஸ்பெற வேண்டுமென்ற தொழில் கமிஷனரின் யோசனையை ஏற்க தோட்ட நிர்வாகம் மறுத்துவிட்டது இதற்கெல்லாம் காரணம் பிரஸ்தாப தோட்டத்தில் இரு தொழிற் சங்கங்கள் இருப்பதுதான் என்று கூறப்படுகிறது.

### தோட்டக் கமிட்டித் தலைவருக்கு மீண்டும் வேலை

கேகாலையைச் சேர்ந்த கநந்தப்பனை குரூப் எரவாப்பொலை டிவிஷன் இலங்கை இந்திய காங்கிரஸ் தோட்டக் கமிட்டித் தலைவர் திரு வி மருதை என்பவரை வேலை நீக்கம் செய்தது சம்பந்தமாக சமீபத்தில் கேகாலை உதவி தொழில் கமிஷனர் காரியாலயத்தில் விசாரணை நடைபெற்றது.

தோட்டக் கமிட்டித்தலைவருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் திரும்பவும் தோட்டத்தில் வேலை கொடுப்பதென்றும், குறைந்த பட்சம் மாதம் 20 நாளாவது அவர்கள் தோட்டத்தில் வேலை செய்யவேண்டுமென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

### தோட்டக் கமிட்டி தெரிவு

பதுளை அழுக்குவத்தை குரூப், பிலாக்கொல்லை டிவிஷனில் தோட்டக கமிட்டி தேர்தல் கூட்டம் கடந்த 20-7-52ல் நடைபெற்றது. கூட்டத்திற்கு ஜனாப் ஏ. அஸீஸ், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பொதுக் காரியதரிசியும், பதுளை ஜில்லா கமிட்டி தலைவருமான திரு எஸ். எம சுப்பையா அவர்களும், ஜில்லா பொதுக் காரியதரிசி ஏ. கே. கந்தசுவாமி அவர்களும் பிரசன்னமாயிருந்து தொழிலாளர் பிரச்னை சம்பந்தமான பல பிரச்னைகளை தெளிவாக எடுத்துக் கூறினார். பின்னர் திரு எஸ். பி. வடிவேல் அவர்களை தலைவராகக்கொண்ட கமிட்டி அமைக்கப்பட்டு 21 கமிட்டி அங்கத்தவர்களும் தெரிவுசெய்யப்பட்டனர்

### தொடாங்கொல்லை வருடாந்தக்கூட்டம்

அட்டதளையைச் சேர்ந்த தொடாங்கொல்லை தோட்டத்தில் கடந்த 20-7-52ல் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் வருடாந்தர கூட்டம் நடைபெற்றது. அப்புதளை ஜில்லா தலைவர் திரு ஏ. சின்னசாமி மூவர்ண கொடியை ஏற்றி கூட்டத்திற்கு தலைமை வகித்தார். அவர் தமது தலைமை பேருரையில பேசியதாவது:— நமது ஜீவாதாரவுரிமைகளைபபற்றியும் மனிதவுரிமைக்காக தற்போது நடக்கும் அறப்போரில் பங்குபற்ற எல்லாரும முன்வர வேண்டும் என்று பேசினார். பிறகு ஜில்லா காரியதரிசி வி. எம். சுப்பிரமணி ... பேசினார்கள்.




பின் தோட்ட கமிட்டி தேர்ந்தெடுக்கப்பட்டது.

தலைவர்: பீ. மெய்யப்பன். காரியதரிசி: வி ஆர். வெங்கடேசன். உபகாரியதரிசி: பி. எஸ் வீரசாமி. பொக்கிஸதார்: வி. ஏ. ராமசாமி.

### பசுளையில் ஜனாப் அஸீஸ பேச்சு

பதுளை பகுதியிலுள்ள பள்ளக்கட்டு பஜாரிலும், கட்டவளை சந்தி ஆகிய இரு இடங்களிலும், கடந்த 20-7-52 ல் இலங்கை இந்தியகாங்கிரஸ் முன்னாள் தலைவர் ஜனாப் ஏ அஸீஸ் தலைமையில் மாபெரும் பொதுக் கூட்டங்கள் நடைபெற்றன. பள்ளககட்டுவ கூட்டத்திற்கு சுமார் 5000 க்கு அதிகமான மக்களும், கட்டவளை சந்தியில் சுமார் 3000 க்கு அதிகமான மக்களும் உற்சாகத்தோடு குழுமியிருந்தனர்.

ஜனாப் அஸீஸ் பேசியதாவது:—

"இன்று நடைபெறும் சத்தியாககிரகம் தீவிரமான முறையிலே நடத்தப்படவேண்டும் என்பதாக இளைஞர்கள் பலர் துடிதுடிக்கின்றனர் கட்டளையிடுங்கள் செயலாற்றுகின்றோம் என முழக்கம் செய்கின்றனர் அவர்களுக்கு காங்கிரஸ் இடும் கட்டளையா அமைதியாக இருங்கள் என்பதை தவிர வேறல்ல. துள்ளும் இளம் வாலிபர்களின முற்போக்கிற்கு காங்கிரஸ் முட்டுக்கட்டைபோடுவதாகவும் கூட கருதுகின்றனர். நமது இழந்த உரிமையை மீண்டும் பெற வேண்டுமானல் காந்திஜீ காட்டிய அன்பு வழியையே பின்பற்ற வேண்டும். துன்பத்திலும் இன்பம் காணவேண்டுமானல் அன்பின் மார்க்கமே சிறந்தது ஆத்திரப்பட்டு வழி தவறிவிடக்கூடாது. அன்புநெறியிலும் வெற்றி காணலாம், பலாத்காரமும் வெற்றியளிக்கலாம். அன்பின் அடிப்படையிலே, அஹிம்சை வழியிலே உருவாக்கப்படும், நிர்மாணிக்கப்படும் சாதனையே சிறந்தது. அதுவே என்றும் நிலைத்திருக்கும் பலாத்காரத்தால் அடையும் சுதந்திரமோ, அல்லது உரிமையோ கிடைப்பதைப்போல் மறைந்துவிடும். இதற்கு உதாரணங்கள் பல உண்டு நாட்டுச் சரித்திரத்திலே புகழ் வாய்ந்த சாமராஜ்யங்களும் சிதைந்து அழிந்துபோன வையே சாட்சியம் கூறும் அன்பின் மார்க்கத்திலே நடைபெறும் சத்தியாக்கிரகப் போராட்டத்திற்கு அனுதாபம் தெரிவியுங்கள், ஆதரவு தாருங்கள்.

### கிணறு வெட்ட பூதம்புறப்பட்டது

நாரனையைச்சேர்ந்த அனிக் தோட்டத் தொழிலாளர்கள் சுமார் 500 க்கு மேற்பட்டவர்கள் தோட்டப் பிரட்டுக்குப் போகவேண்டுமென்று கேட்டதாகவும், அது சம்பந்தமாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தோட்டத் துரைமார் சம்மேளனத்துடன் கலந்து பேசி நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கையில் திடீரென சுமார் 17—தொழிலாளர்கள் மீது (ஆண்-பெண்கள் உட்பட) தோட்டத்தில் கலகம் விளைவித்ததாக குற்றஞ்சாட்டி நாரனை ஜில்லா கோர்ட்டில் ஒரு வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. இறுதியில் போலீஸாரும், தோட்ட நிர்வாகமும் குற்றச் சாட்டுகளை வாபஸ்பெற்று வழக்கைச் சமரசமாக தீர்த்துக்கொண்டனர்.

### வேலையை குறைத்துச் செய்தார்களாம்


பதுளையைச் சேர்ந்த கந்தேஹென தோட்டத்தில் வேலைபார்த்துவரும் தொழிலாளர்கள் அதிகமென்று ஒரு போலி காரணத்தைச் சொல்லி சுமார் 60 தொழிலாளர்களுக்கு நோட்டீஸ் கொடுக்கப்பட்டது. அத்தோடு தோட்டத் தொழிலாளருக்கும் சூப்ரின்டென்டனுக்குமிடையே பலவித

இரும்பு பணப் பெட்டிகள்

லண்டன் நகர ஜோண்டான் லிமிட்டெட்டாரால் உற்பத்தி செய்யப்பட்டவை

1795-ம் ஆண்டில் ஸ்தாபகம் - மிகப் பழைய ஸ்தாபனம் - உலகத்திலேயே மிகக் கைதேர்ந்த க்ஷேமயந்திர சிற்பிகள்

நெருப்பைத் தடுக்கும் ஒரு ஜோன்டான் இரும்புப் பெட்டியாவது அதனுள் உள்ள பொருள்களை இதுவரை நெருப்பால் நாசப்படவில்லை.



கள்வர்களைத் தடுக்கும் ஒரு ஜோன்டான் இரும்புப் பெட்டியாவது இதுவரையில் கள்வர்களால் திறக்கப்படவில்லை.

டொட்வெல் & கம்பெனி லிமிட்டெட்.

ஆபீஸ் பொருட்கள் விற்பனைப் பகுதி


18/20, குவீன்ஸ் வீதி, கோட்டை, கொழும்பு

போன்: 2301.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிங்ஸ்லி வெம்பிளி வெல்லிங்டன்
[கொழும்பு] [கண்டி] [திரிகோணமலை]

## சினிமாஸ் லிமிட்டெட்டார் திரையிடும் மகத்தான அழகுச் சித்திரம்!



★ வயோதிகத்தில் இரண்டாம் தாரத்திற் காசைப்பட்டு, தாயற்ற மகளை அவசரமாக மணமுடித்துக் கொடுக்கும் தந்தை.

★ அசட்டுக் கணவனை, பதிபக்திகொண்ட கல்யாணி அன்பினால் திருத்திவரும் விந்தை.

★ "விபசாரி" என்ற பட்டம் சூட்டி வீட்டைவிட்டுத் துரத்தப்படும் அபலைப் பெண்ணின் பரிதாபகரமான கஷ்டங்கள்.

★ பிரிந்தவர் கூடினால்...... என்பதற்கேற்ப மூர்த்தியும் கல்யாணியும்மீண்டும் சந்தித்து மகிழும் காட்சிகள்.

மூர்த்தியின் முடிவென்ன? கல்யாணியின் கதி என்ன? பிரிந்த குடும்பம் சேர்ந்ததா?
இந்தப் புதிர்களுக்கு விளக்கம் வெள்ளித்திரையில் காணுங்கள்.

### உங்கள் அபிமானத்தைக் கவர்ந்த முதல்தர நடிகர்கள் தோன்றுகிறார்கள்!

| நடிகர்கள்: | நடிகைகள்: |
|---|---|
| எம். என். நம்பியார் | பி. எஸ். சரோஜா, |
| கருணாநிதி, வி. எம். ஏழுமலை | எம். சரோஜா, பி. எஸ். |
| டி. பாலசுப்ரமண்யம் | ஞானம, எம. எஸ். சுபத்ரா |

# கல்யாணீ

| டைரக்ஷன்: | கதை: | இசைஅமைப்பு: |
|---|---|---|
| ஆச்சாரயா- எம். மஸ்தான் | மாடான்தியேட்டாஸ் | எஸ். தக்ஷிணாமூர்த்தி, ஜி. ராமனாதன் |

வசனம்:
ஏ. எஸ். நாகராஜன்

## காமினி
சிறந்த நடிகர்கள்நடிக்கும ஹிந்திப் படம்
## குங்குரூ

## மைலன்
டி. ஆர். மகலிங்கம-மாதுரிதேவி
## வேலைக்காரன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை கொழும்பு, தட்டாதெரு, 196ம் இலக்க இல்லத்தில்வசிக்கும் எஸ். டி. சிவநாயகம் அவர்களால் ஸிலோன் நியூஸ் பேப்பர்ஸ் ...ஸ்தாபனக்காரின் சார்பில் 194 ஏ, தட்டாதெரு, சுதந்திரன் அச்சகத்தில் பதிப்பித்து 1952 ஆகஸ்ட் 3ந் தேதி பிரசுரம்செய்யப்பட்டது